

විදේශ කටයුතු අමාත්‍යාංශය
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
MINISTRY OF FOREIGN AFFAIRS

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

2022

වැය ශීර්ෂ අංක : **112**
செலவினத் தலைப்பு இல. : 112
Expenditure Head No. : 112

ජනරජ ගොඩනැඟිල්ල” කොළඹ-1” ශ්‍රී ලංකාව
குடியரசு கட்டிடம், கொழும்பு -1, இலங்கை
Republic Building, Colombo -1, Sri Lanka

பொருளடக்கம்

அத்தியாயம் - 1 : நிறுவனம் பற்றிய விபரம்..... 1
1.1 அறிமுகம் 1
1.2 தொலைநோக்கு மற்றும் செயற்பணி..... 2
1.3 அமைச்சின் கடமைகளும் மற்றும் பணிகளும் 3
1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு 5
1.5 வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் / அலுவலகங்களின் வலையமைப்பு 6
1.6 பிரிவுகளின் கட்டமைப்பு 8
அத்தியாயம் - 2 : முன்னேற்றமும் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும் 8
2.1. இலங்கையின் இராஜதந்திரத் தொடர்பு 8
2.2 இலங்கையின் பிராந்திய மற்றும் பல்தரப்பு ஈடுபாடுகள் 12
2.3 சவால்களை எதிர்கொள்ளுதல் 13
2.4 செயலாற்றுகை பற்றிய கண்ணோட்டம்: ஒன்றுக்கொன்று இணைந்த துறைகளைக்கொண்ட பிரிவுகள் 14
2.4.1 பொருளாதார விவகாரங்கள் பிரிவு 14
2.4.2 சர்வதேச பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு 17
2.4.3 சமுத்திர விவகாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற பிரிவு 18
2.4.4 வெளிநாட்டு இலங்கையர்கள் பிரிவு..... 20
2.4.5 கொள்கைத் திட்டமில், ஆராய்சி மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு..... 21
2.4.6 பொது மக்கள் இராஜதந்திரப் பிரிவு 22
2.4.7 பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கப் (சார்க்) பிரிவு 24
2.4.8 ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு 26
2.5 செயலாற்றுகை பற்றிய கண்ணோட்டம்: பிராந்திய பிரிவுகள் 30
2.5.1 ஆபிரிக்க விவகாரங்கள் பிரிவு 30
2.5.2 அமெரிக்கா பிரிவு 31
2.5.3 கிழக்கு ஆசியா பிரிவு 31
2.5.4 ஐரோப்பா, மத்திய ஆசியா, ஐரோப்பிய ஒன்றிய மற்றும் பொதுநலவாயப் பிரிவு..... 33
2.5.5 மத்திய கிழக்கு பிரிவு 37
2.5.6 தெற்காசியா பிரிவு 39
2.5.7 தென் கிழக்கு ஆசியா பிரிவு..... 40
2.6 செயலாற்றுகை பற்றிய கண்ணோட்டம்: தொழிற்பாட்டு பிரிவுகள் 43
2.6.1 தொழிற்பாட்டு பிரிவுகள் கொன்சியுலர் விவகாரங்கள் பிரிவு 43
2.6.2 பொது நிருவாகப் பிரிவு 45
2.6.3 மனித வளங்கள் மற்றும் தூதரக பணியக முகாமைத்துவப் பிரிவு 47
2.6.4 உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு 49
2.6.5 சட்டப் பிரிவு 49
2.6.6 வெளிநாட்டுச் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவு..... 53
2.6.7 நெறிமுறைப் பிரிவு 53

அத்தியாயம் - 3: நிதிச் செயலாற்றுகை 58
3.1 நிதிச்செயலாற்றுகைக் கூற்று 58
3.2 நிதி நிலைமைக் கூற்று 59
3.3 பண ஓட்டக் கூற்று 60
3.4 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை..... 62
3.5 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டுச் செயலாற்றுகை 63
3.6 அமைச்சின் செலவினத்திற்கான ஒதுக்கீடுகளை வழங்குதல் 63
3.7 நிதிச் சொத்துக்கள் அல்லாதவற்றை அறிக்கையிடல் செயலாற்றுகை 64
3.8 2022 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 64
அத்தியாயம் - 4 : பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் 65
4.1. அமைச்சின் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் சாதனை(KPI):..... 65
4.2. பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் சாதனை: ஒன்றுக்கொன்று இணைந்த துறைகளைக் கொண்ட பிரிவுகள் 67
4.3 முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளின் சாதனை : பிராந்திய பிரிவுகள் 76
4.4 செயலாற்றுகை குறிகாட்டிகளின் சாதனை: தொழிற்பாட்டு பிரிவுகள் 87
அத்தியாயம் - 5 : நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை (SDG)அடையும் செயலாற்றுகை 95
5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) 95
அத்தியாயம் - 6 : அமைச்சின் மனிதவள விபரம் 96
6.1 பதவியணி முகாமைத்துவம் 96
6.2 மனித வள அபிவிருத்தி 98
அத்தியாயம் - 7 : இணக்க அறிக்கை 102

அத்தியாயம் - 1 : நிறுவனம் பற்றிய விபரம்

1.1 அறிமுகம்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, 43 வெளிநாட்டு தூதரகங்களுக்கு / பதவிகளுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற அதேவேளையில், வெளிநாட்டிலுள்ள அறுபது (60) [1] இலங்கை தூதரகங்களின் / பதவிகளின் வலையமைப்பினையும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, கொழும்பிலுள்ள அதனுடன் இணைந்த முகவகரகங்கள் உள்ளடங்கலான 30 சர்வதேச அமைப்புக்களையும் நிருவகிக்கின்றது. தேசிய சமுத்திர விவகாரக் குழு (NOAC) செயலகம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் (LKIIRS) மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் (BIDTI) ஆகியவற்றின் செயலாற்றுகைகளும் ஆய்வாண்டு காலப்பகுதியில் அமைச்சினால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தன.

அமைச்சின் விடயப்பரப்பானது (2022 யூலை 22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி), கோவிட்-19 மற்றும் ஏனைய அவசரகால நிலைமைகளுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் அமைச்சினால் தாபிக்கப்பட்ட அவசரகால நிலைமை மத்திய அலகுக்கு மேலதிகமாக, மொத்தமாக 23 வெவ்வேறு பிரிவுகளுக்குப் பிரித்து, குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு பிரிவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட பணியின் தன்மையைப் பொறுத்து, ஒன்றுக்கொன்று இணைந்த துறைகளைக் கொண்ட எட்டு (8) பிரிவுகள், ஏழு (7) பிராந்தியப் பிரிவுகள் மற்றும் எட்டு (8) தொழிற்பாட்டுப் பிரிவுகள் அமைச்சின் பிரிவுக் கட்டமைப்பில் உள்ளக்கப்பட்டுகின்றன.

இருதரப்பு அரசியலும், பொருளாதார உறவுகளும், பாதுகாப்பும், மூலோபாய ஒத்துழைப்பும், விஞ்ஞானமும் தொழில்நுட்ப ஒத்துழைப்பும், அபிவிருத்தி உதவி, கலாசாரமும் மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துவதும், அதேபோன்று பல்தரப்பு மற்றும் பிராந்திய ஈடுபாடுகளைப் பேணி வளர்ப்பதனூடாக வெளிநாடுகளில் இலங்கையின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளின் வலையமைப்பின் அடிப்படைப் பொறுப்பாகும். வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகள், அங்கீகாரம் பெற்ற அந்தந்த நாட்டில் / நாடுகளில் வசிக்கும் இலங்கை புலம்பெயர் சமூகங்களுக்குத் தேவையான தொழில் நலன்புரி விடயங்களை உறுதி செய்கின்ற அதேவேளையில், அவர்களுக்கு தூதரக உதவிகளை வழங்குவதுவும் இவர்களின் பொறுப்பாகும்.

1 முப்பத்து நான்கு (34) தூதரகங்கள், பன்னிரண்டு (12) உயர்ஸ்தானிகராலயங்கள், இரண்டு (2) ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரத் தூதரகங்கள், (ஜெனீவா மற்றும் நியூயோர்க்), சென்னையிலுள்ள பிரதி உயர்ஸ்தானிகராலயம், பலஸ்தீனத்தின் ரமல்லா நகரில் பிரதிநிதி அலுவலகம் மற்றும் பத்து (10) துணைத் தூதரகங்கள் அமைச்சின் தற்போதைய தூதரக வலையமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலக்கு

சர்வதேச சமூகத்திற்குள் பொறுப்புள்ள நாடாக இருத்தல் மற்றும் அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுதல்

நோக்கம்

அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைக்கு இணங்க, இலங்கையின் தேசிய நலன்களை சர்வதேச அளவில் மேம்படுத்துதல், முன்வைத்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் தேசிய நலன்களுக்கு இணங்க வெளிநாட்டு உறவுகளை நிர் வகிப்பது குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

1.3 அமைச்சின் கடமைகளும் பணிகளும்

பகுதி 1: பிரிவு (I), இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இல.: 2289/43, 2022 யூலை 22

	கடமைகளும் பணிகளும்	நிரல் II (திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்)	நிரல் III நடைமுறைப்படுத்தப் வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்
1.	அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையில், வெளிநாட்டு அலுவல்கள் விடயத்துடனும் மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கை களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங் களையும் வகுத்தமைத்தலும், செயற்படுத்துதலும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்.	1. வெளிநாடுகளிலுள்ள தூதரகங்கள்.	1. 1981ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கொன்சியூலர் பணிகள் சட்டம்.
2.	அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடனும், மக்களுக்கு அனுசரணையாகவும் வழங்குதல்.	2. தேசியக் கடல்சார் நடவடிக்கைச் செயற் குழுச் செயலகம்.	2. 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டம்.
3.	ஊழல் மற்றும் வீண்விரயத்தை இல்லாதொழிக் கின்ற அதேவேளையில், அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்தி,நவீன முகாமைத்துவ தொழில்நுணுக்கங்களையும், தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும், நடவடிக்கைமுறைகளையும் மீளமைத்தல்.	3. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கை நிறுவகம், வெளிநாடுகளிலுள்ள தூதரகங்கள்.	3. 2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை மூலோபாய ஆய்வுகள் நிறுவனச் சட்டம்.
4.	இலங்கை சர்வதேசரீதியில் செயலுறு உறுப்பு நாடாக பரந்தளவிலான ஒத்துழைப்புடன் வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதன் ஊடாக வெளிநாடுகளில் இலங்கை பற்றிய சிறந்த தோற்றப்பாட்டை நிலைநிறுத்துதல்.		4. வேறேதேனும் அமைச்சரொரு வரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாத வையும், இங்கே I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும்.
5.	சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காகத் தேசியக் கொள்கைகளுக்கமைவாக தேவையான பணிகளை நிறைவேற்றுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.		

கடமைகளும் பணிகளும்	நிரல் II (திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்)	நிரல் III நடைமுறைப்படுத்தப் வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்

6. இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான பிரசாரங்கள் தொடர்பில் பொருத்தமான வகையில் பதிலளித்து, இலங்கையின் தோற்றப்பாட்டை உறுதிப்படுத்துதல்.

7. சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல், பொருளாதார, சுற்றாடல், சமூக மற்றும் கலாசார ஒத்துழைப்பு அமைப்புகளுடன் முனைப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

8. வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுதலும் சட்டவாக்கங்கள், உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்கள் குறித்த கலந்துரையாடல் களும்.

9. இராஜதந்திர காப்புரிமைகளையும், சிறப்புரிமை களையும் பெற்றுக்கொடுத்தல்.

10. வெளிநாட்டு வர்த்தகத்தையும், முதலீடுகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டு நிதி தொடர்புகள் நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்காக உரிய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவை யான உதவிகளை வழங்குதல்.

11. இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் சமுத்திர உரிமையைப் பாதுகாப்பதற்கு தேவையான வெளிநாட்டு உறவுகளை உறுதிசெய்தல்.

12. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் நலனோம்புகைக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

13. கொன்சியூலர் சேவைகளை வழங்குதல்.


14. இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு இணைக்கப்படுகின்ற அலுவலர்களை நிருகித்தல் மற்றும் அவர்களின் தொழில்சார் இயலளவை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல்.

15. புவியியல்ரீதியான அரசியல் போக்குகளை கற்றாராய்ந்து இலங்கைக்குச் சாதகமான விதத்தில் அந்தப் போக்குகளை முகாமை செய்வதற்கு வேண்டிய உபாயமுறைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.


16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங் களையும், அத்தகைய நிறுவனங்களுக்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ள அனைத்து விடயதானங் களுடனும் தொடர்புபட்டுள்ள விடயங்களையும் மேற்பார்வையிடுதல்.

17. II ஆம் நிரலில் பட்டியலிப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வையிடுதல்.


1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு



1.5 வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களின்/ பதவிகளின் வலையமைப்பு



1.6 பிரிவுகளின் கட்டமைப்பு



அத்தியாயம் - 2 : முன்னேற்றமும் எதிர்காலம் பற்றிய கண்ணோட்டமும்

இந்த அமைச்சானது, வெளிநாடுகளுக்கிடையில் இராஜதந்திர உறவுகளை மேற்கொள்வதற்கும், பேணுவதற்கும் பொறுப்பான ஒரேயொரு அரச நிறுவனமாக வெளிநாடுகளில் இலங்கையின் தோற்றப்பாட்டை முன்னிறுத்தி ஊக்குவிப்பதற்காக, நாட்டின் தேசிய நலன்களுக்கு அமைவாக, கோவிட்-19 மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட தற்போதைய உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளால் உருவாக்கப்பட்ட பல சவால்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியிலும், அதி உயர்மட்ட திருப்தியுடன் அதன் கடமைகளையும் செயற்பாடுகளையும் ஆற்றியுள்ளது.

இந்த அமைச்சானது, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகள், வரிசை முகவரகங்கள் / அமைச்சுகள் அதேபோன்று கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள் / பதவிகள் ஆகியவற்றுடனான நெருக்கமான ஒருங்கிணைப்புடனும், ஒத்துழைப்புடன் ஆய்வாண்டு காலப்பகுதியில் இனங்காணப்பட்ட சிக்கல்களை / பிரச்சினைளை நிவர்த்தி செய்வதன் மூலம் அதனது கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்தேர்ச்சியாக முன்னேற்றத்தை நோக்கி இட்டுச்செல்வதில் கவனஞ்செலுத்துகின்றது.

2.1. இலங்கையின் இராஜதந்திர செயலெல்லை

மீளாய்வுக் காலப்பகுதியில், இலங்கை சனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள், குறிப்பாக நாட்டின் முன்னுரிமைகளை வெளிப்படுத்துவதற்காக, வெளிநாட்டு தலைவர்களுடனும், பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்வோருடன் தொடர்புகொண்டிருந்தனர். இப்பின்னணியில், 2022 செப்டெம்பர் மாதத்தில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் சபையின் 55 ஆவது கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிலிப்பைன்ஸுக்கும், அதேபோன்று, 2022 நவம்பர் 27 ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் , காலநிலை மாற்றம் மீதான சமவாயம் (UNFCC), COP இல் கலந்துகொள்வதற்காக எகிப்திற்கும் மாண்புமிகு சனாதிபதி மேற்கொண்ட விஜயங்களுக்கு மேலதிகமாக, அரச இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக பிரித்தானியா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (ருரேசுஊ) 49, 50 மற்றும் 51 ஆவது அமர்வுகள், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் (UNGA) 77 ஆவது அமர்வு மற்றும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு (ஊர்முபுஆ) மற்றும் இந்தியன் ஓசன் றிம் அசோசியேசன் (IORA), அமைச்சர்கள் சபைக் கூட்டம் (COM) ஆகியவற்றின் அமர்வுகளில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பங்குபற்றியிருந்ததற்கு மேலதிகமாக, எமிரேட்ல் (UAE) நடைபெறும் எக்ஸ்போ-2020, பாரிஸில் இந்தோ-பசிபிக் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் மன்றம் மற்றும் கம்போடியாவில் ஆசியான் (ASEAN) உச்சிமாநாடு ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயங்கள், பிராந்திய மற்றும் பல்தரப்பு ஒன்றியங்களில் இலங்கையின் துடிப்பான ஈடுபாட்டை எடுத்துக்காட்டியுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கொரிய குடியரசு, இந்தியா, கட்டார், சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அமரிக்கா ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட இருதரப்பு உத்தியோகபூர்வ விஜயங்கள் அந்த நாடுகளுடனான இருதரப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான வழிகளைத் திறந்துவிட்டிருந்தன. 2022 சனவரி மாதத்தில் வர்த்தக அமைச்சரின் தலைமையில், வர்த்தக அமைச்சின் பிரதிநிதிகளுடன் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இராஜாங்க அமைச்சரின் பாகிஸ்தான் விஜயமானது, அந்நாட்டுடனான இலங்கையின் தற்போதைய சுமுகமான உறவினை மேலும் வலுப்படுத்தியிருந்தது. இந்த மீளாய்வுக் காலப்பகுதியில், இந்தியா, பங்களாதேசம், பூட்டான், சீனா, ஹங்கேரி, சவுதி அரேபியா, நேபாளம், துருக்கி மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளிநாட்டு / வெளியுறவு அலுவல்கள் அமைச்சர்களின் விஜயங்கள், அதேபோன்று மாலைதீவு சனாதிபதியின் தனிப்பட்ட விஜயம், சர்வதேச 'போரா' சமுகத்தினரின் ஆன்மீக தலைவரின் விஜயம் ஆகியவை அறிக்கையிடல் காலப்பகுதியில் அந்த நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேலும் அதிகரிப்பதற்கு உதவியிருந்தது.

இந்த ஆய்வாண்டு காலப்பகுதியில், தெற்காசிய அரச, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான பிரித்தானிய அமைச்சர், கொரிய குடியரசின் தேசிய சட்டமன்றத்தின் சபாநாயகர், கொரிய குடியரசின் அரசாங்க கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர், பாராளுமன்றத்தின் சபாநாயகர், மாலைதீவு மற்றும் அவுஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் போன்றோரும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, அரசாங்கத்தின் உயர்மட்ட அலுவலர்கள் உள்ளடங்கலாக, இலங்கையிலுள்ள உரிய பிரமுகர்களுடனும் பேச்சுவாரத்தையில் கலந்துகொள்வோருடனும் கலந்துரையாடியிருந்தனர்.

இந்த அறிக்கையிடல் காலப்பகுதியில், உலக சுகாதார தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய குழுவின் 75 ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்கான பூட்டான் விஜயம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் யப்பான் விஜயம், எரிபொருள் அமைச்சர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு,

சந்தை பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சரின் ஓமான் விஜயம், எக்ஸ்போ-2020 இல் பங்கேற்பதற்காக சுற்றுலா, மாணிக்கக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சரின் ஐக்கிய அரபு அமீரக விஜயம், நிதி அமைச்சர், சபாநாயகர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோரின் இந்திய விஜயங்கள் போன்றவை ஏனைய அமைச்சுசார் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் போன்றோரின் வெளியக விஜயங்களிடையே குறிப்பிடத் தக்கவையாகும். இந்த ஆய்வாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக மற்றும் வெளியக உயர்மட்ட விஜயங்களின் விபரங்கள் இந்த அறிக்கையின் அட்டவணை - I மற்றும் II இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை, I - உள்ளக உயர்மட்ட விஜயங்கள்

அரசின் / அரசாங்கத்தின் தலைவர்கள்

1.	2021 டிசம்பர் 30 முதல் 2022 சனவரி 02 வரை மாலைதீவு சனாதிபதி மாண்புமிகு இப்ராஹிம் மொஹமட் சொலிக் அவர்களின் தனிப்பட்ட விஜயம்
2.	தென்னாப்பிரிக்க குடியரசின் சனாதிபதி சிரில் ரமபோச (Cyril Ramaphosa) 2022 நவம்பர் 14 முதல் 16 வரை
3.	2022 டிசம்பர் 29 முதல் 2023 சனவரி 02 வரை மாலைதீவு சனாதிபதி மாண்புமிகு இப்ராஹிம் மொஹமட் சொலிக் (Ibrahim Mohamed Solih) அவர்களின் விஜயம்

வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர்கள்

1.	2022 சனவரி 8-9 இல் சீன மக்கள் குடியரசின் இராஜாங்க ஆலோசகர் மற்றும் வெளிநாட்டமைச்சர் மேதகு வாங் யி (Wang Yi)
2.	2022 சனவரி 12 இல் ஹங்கேரி வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ பீட்டர்ஸ் சிஜ்ஜார்ட்டோ
3.	2022 சனவரி 27-28 இல் துருக்கி குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மெவ்லுட் கவசோக்லு
4.	2022 மார்ச் 13, 14 ஆம் திகதிகளில் சவுதி அரேபியா வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ பைசல் பின் பர்கான அல்சவுட் (Faisal bin Farhan Al Saud)
5.	2022 மார்ச் 28-31 பங்களாதேச வெளிநாட்டமைச்சர் கலாநிதி ஏ.கே.அப்துல் மொமென் (Dr. A. K. Abdul Momen)
6.	2022 மார்ச் 28-31 பூட்டான் வெளிநாட்டமைச்சர் கலாநிதி தண்டி டோர்ஜி (Dr. Tandi Dorji of Bhutan)
7.	2022 மார்ச் 27-30 இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்ஷங்கர் (Dr. S. Jaishankar)
8.	2022 மார்ச் 28-31 நேபாள வெளிநாட்டமைச்சர் கலாநிதி நாராயண் கட்கா (Dr. Narayan Khadka)
9.	2022 மார்ச் 28-30 தாய்லாந்து பிரதி பிரதமர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ. டொன் பிரமுத்வினால் (Don. Pramudwinal)

ஏனைய அமைச்சர்கள்

1.	2022 சனவரி 16 முதல் 18 ஆம் திகதிகளில் 5 ஆவது இளைஞர் பாராளுமன்றத்தின் 2 ஆவது அமர்வின் பிரதம விருந்தினராக மாலைதீவுக் குடியரசின் பாராளுமன்ற சபாநாயகர் முகமது நஷீத்
2.	ஐக்கிய நாடுகளின் மற்றும் பொதுநலவாயத்தின் தெற்காசிய அரச ஐக்கிய இராச்சிய அமைச்சர் அகமது, விம்பிள்டன் 2022 சனவரி 18 முதல் 20 வரை
3.	2022 சனவரி 19 முதல் 22 வரை கொரிய குடியரசின் தேசிய சட்டமன்றத்தின் சபாநாயகர் பார்க் பியோங்-சீக்
4.	2022 மார்ச் 30 முதல் ஏப்ரல் 2 வரை கொரிய குடியரசின் அரசாங்க கொள்கை ஒருங்கிணைப்புக் கான அமைச்சர் கூ யுன்-சியோல்
6.	2022 மே 19 முதல் 22 வரை மற்றும் 2022 யூன் 17 முதல் 20 வரை மாலத்தீவு குடியரசின் பாராளுமன்ற சபாநாயகர் முகமது நஷீத்

7.	2022 யூன் 19 முதல் 20 வரை ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் கிளேர் ஓ நீல் Clare O' Neil
8.	மாலதீவுக் குடியரசின் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது நஷீத் Mohamed Nasheed, 2022 ஒக்டோபர் 19 முதல் 22 வரை

ஏனைய வெளிநாட்டு பிரமுகர்கள்

1.	2021 டிசம்பர் 12 முதல் 2022 சனவரி 07 வரை, ஐக்கிய நாடுகள் உதவி செயலாளர் நாயகம், UNDP உதவி நிருவாகி மற்றும் UNDP ஆசியா பசுபிக் பிராந்திய பணியகத்தின் பணிப்பாளர், அம்மணி கனி விக்னராஜா
2.	2022 மார்ச், 09 முதல் 11 வரை, ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் திரு மசட்சுகா அசகாவா மற்றும் குழுவினர்
3.	2022 மார்ச் 22 முதல் 23 வரை, அமெரிக்க இராஜாங்க திணைக்கள துணைச் செயலாளர், தூதுவர் விக்டோரியா நூலாண்ட்
4.	2022 மார்ச் 26 முதல் ஏப்ரல் 01 வரை, BIMSTEC செயலாளர் நாயகம்
5.	2022 யூன் 23, இந்திய வெளிவிவகார செயலர், ஸ்ரீ வினய் குவாத்ரா
6.	2022 யூலை 14 முதல் 16 வரை, யப்பான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தென் கிழக்கு மற்றும் தென் மேற்கு விவகாரங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் திரு கானோ தகஹிரோ
	(2022 யூலை 14 முதல் 16 வரை, இலங்கை - யப்பான் இடையே 3 ஆவது சுற்று கொள்கை (அரசியல்) பேச்சுவார்த்தை
7.	2022 செப்டெம்பர் 10 முதல் 12 வரை, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரமைப்பின் நிருவாகி அம்மணி சமந்தா பவர்
8.	ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) முன்னாள் நிறைவெற்றுப் பணிப்பாளர் எரிக் சொல்ஹெய்ம் 2ய022 ஒக்டோபர் 10 முதல்13 வரை

மாநாடுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள்

1	பல துறை தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்புக்கான 5 ஆவது வங்காள விரிகுடா முன்முயற்சி (BIMSTEC) உச்சிமாநாடு கொழும்பு, இலங்கை BIMSTEC பொதுச் செயலாளர் - 1 வெளிநாட்டு அமைச்சர்கள் - 5 2022 மார்ச் 28 முதல் 30 வரை

அட்டவணை -II- வெளியக உயர்மட்ட விஜயங்கள்

சனாதிபதி

#	நாடு	காலம் (2022)	நோக்கம்
1.	ஐக்கிய இராச்சியம்	செப்ரெம்பர் 19-22	அதிமேற்குராணி ஹெர் மெஜஸ்டி எலிசபெத;-II அவர்களின் அரச இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கு.
2.	யப்பான்	செப்ரெம்பர் 26-28	யப்பான் முன்னாள் சனாதிபதி ஷின்சோ அபே அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கு.

3.	பிலிப்பைன்ஸ்	செப்ரெம்பர் 28-30	ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) ஆளுநர்கள் சபையின் 55 ஆவது ஆண்டு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு.
4.	எகிப்து	நொவெம்பர் 7-8	ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம்-காலநிலை மாற்றம் மீதான சமவாயத்தில் (UNFCCC), COP 27 கலந்து கொள்வதற்கு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

#	நாடு	காலம் (2022)	நோக்கம்
1.	ஐக்கிய அரபு எமிரேட்ஸ்	சனவரி 2-6	எக்ஸ்போ -2020 இல் கலந்துகொள்வதற்கு
2.	கொரிய குடியரசு	சனவரி 6-8	உத்தியோகபூர்வ விஜயம்
3.	இந்தியா	பெப்ரவரி 6-8	உத்தியோகபூர்வ விஜயம்
4.	பாரிஸ்	பெப்ரவரி 21-25	இந்தோ-பசிபிக் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் பேரவைக்கு உத்தியோகபூர்வ விஜயம்
5.	ஜெனிவா	பெப்ரவரி 25 முதல் மார்ச் 5 வரை	ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் (UNHRC) 49 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக
6.	டோஹா கட்டார்	மார்ச் 26-27	உத்தியோகபூர்வ விஜயம்
7.	சிங்கப்பூர்	யூன் 8-11	உத்தியோகபூர்வ விஜயம்
8.	ஜெனிவா	யூன் 12-17	ஐ.நா.அ.உயர் ஸ்தானிராலயத்தின் 50 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு
9.	ருவாண்டா	யூன் 20-26	பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் (CHOGM) கலந்து கொள்வதற்கு
10.	கம்போடியா	ஓகஸ்ட்4-5	'ஆசியான்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு
11.	ஜெனிவா	செப்ரெம்பர் 7-13	ஐ.நா.அ.உயர் ஸ்தானிராலயத்தின் 51 ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்கு
12.	நியூயோர்க்	செப்ரெம்பர் 19-27	ஐ.நா.பொ.சபையின் 77 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு
13.	ஜெனிவா	ஒக்டோபர் 3-8	ஐ.நா.அ.உயர் ஸ்தானிராலயத்தின் 51 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்கு
14.	பங்களாதேஷ்	நொவம்பர் 22-24	22 ஆவது IORA மாநாட்டில் கலந்து கொள்வதற்கு
15.	ஐக்கிய அமெரிக்கா	நொவம்பர் 29 முதல் டிசெம்பர் 5 வரை	வாஷிங்டன் டி.சி.க்கு உத்தியோகபூர்வ வருகை

வெளிநாட்டு அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள்

#	நாடு	காலம் (2022)	நோக்கம்
1.	ஐக்கிய அரபு எமிரேற்ஸ்	சனவரி 3	சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
2.	பாகிஸ்தான்	சனவரி 20 -27	வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
3.	இந்தியா	பெப்ரவரி 6-8	பாராளுமன்ற சபாநாயகர், நிதி அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்

#	நாடு	காலம் (2022)	நோக்கம்
4.	சவுதி அரோபிய இராச்சியம்	மார்ச் 19-24	வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
5.	ஓமான்	மார்ச் 26-28	வர்த்தக அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
6.	ஓமான்	யூன் 27-29	மின்சக்கி மற்றும் எரிசக்தி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
7.	பூட்டான்	செப்ரெம்பர் 5-9	தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார பிராந்தியக் குழுவின் 75 ஆவது நிகழ்வில் பங்கேற்பதற்கு சுகாதார அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
8.	யப்பான்	செப்ரெம்பர் 27 முதல் ஒக்டோபர் 4 வரை	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
9.	ரஷ்யா	ஒக்டோபர் 9-16	கல்வி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
10.	கசகஸ்தான்	ஒக்டோபர் 12-13	ஊஐஊயு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரால் மேற்கொள்ளப் பட்ட விஜயம்
11.	ஐக்கிய இராச்ச-ியம்	நவம்பர் 7	உலக சுற்றுலா மார்ட்டில் கலந்து கொள்வதற்காக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்

2.2 இலங்கையின் பிராந்திய மற்றும் பல்தரப்பு ஈடுபாடுகள்

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (டீஜஆளுவுநுஊ) வங்காள விரிகுடா முன்முயற்சியின் பல கூட்டங்கள் / மாநாடுகள், இதில் பரிசீலனையில் உள்ள காலப்பகுதியில் பாரம்பரிய மருத்துவத்திற்கான (BIMSTEC) பணிக்குழுவின் (BTFTM) 4 ஆவது கூட்டம் (the 4th Meeting of the BIMSTEC Task Force on Traditional Medicine (BTFTM)) உட்பட, 22 ஆவது சிரேஷ்ட அலுவலர்களின் கூட்டம் (SOM) (the 22nd BIMSTEC Senior Officials' Meeting), பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா மற்றும் 18 ஆவது அமைச்சர்கள் கூட்டம் (18th BIMSTEC Ministerial Meeting) ஆகியவை உள்ளடங்கலாக இலங்கை கலந்து கொண்டு நடத்தியிருந்தது.

ஐந்து (5) உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா அமைப்பின் செயலாளர் நாயகம் ஆகியோர் நேரில் பங்குபற்றியிருந்த 2022 மார்ச் மாதத்தில் இலங்கை நடத்திய 5 ஆவது பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா உச்சிமாநாட்டில், உறுப்பு நாடுகளின் சுமார் ஏழு (7) அரச / அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தீவு நாடொன்றாக, 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியன் ஓஷன் ரிம் அசோசியேஷன் (IORA) உடனான இலங்கையின் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாக இருந்ததுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அவர்கள், 2022 நவம்பர் மாதத்தில் பங்களாதேஷில் நடைபெற்ற அதன் 22 ஆவது அமைச்சர்கள் மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்

கொழும்பு செயல்முறை (CP), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC) மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான சங்கம் (ASEAN) போன்ற ஏனைய பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் அமைச்சின் ஈடுபாடுகள். குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டிருந்தன.

2022 ஒக்டோபர் மாதத்தில் கஜகஸ்தானில் ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் (CICA) பற்றிய 6 ஆவது மாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அவர்கள் பங்குபற்றியமையும் பலதரப்பட்ட ஒத்துழைப்புத் துறையில் உறுப்பு நாடுகளுக் கிடையிலான உறவுகளை மேம்படுத்தியிருந்தது.

இலங்கையானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 49 ஆவது, 50 ஆவது மற்றும் 51 ஆவது அமர்வுகளில் தொடர்ச்சியான தொடர்புகளையும் பிரதிநிதித்துவங்களையும் கொண்டிருந்ததுடன், நாட்டு மக்களின் இறைமை, சுதந்திரம் மற்றும் சம உரிமைகளுக்கு அமைவாக, இலங்கையின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியிருந்தது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் (UNGA) 77 ஆவது அமர்வுக்கு இலங்கையின் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கிய போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அவர்கள் கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தற்போதைய உலகளாவிய பொருளாதார நெருக்கடியினால் பிரதானமாக தாக்கப்பட்டுள்ள நாட்டின் மக்களால் முகம்கொடுக்கப்பட்ட தொடர்புபட்ட சவால்களை நிவர்த்திசெய்வதற்கான இலங்கையின் முயற்சியை சுட்டிக்காட்டி அமர்வில் அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

2022 யூன் 23 ஆம் திகதி நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையில். பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவத்திலு மான பாகுபாட்டினை இல்லாதொழித்தல் (CEDAW) மாநாட்டிற்கான அரச கட்சிகளின் 22 ஆவது கூட்டத்தின் போது நடத்தப்பட்ட தேர்தலில் 2023-2026 காலப்பகுதிக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான (CEDAW) ஐக்கிய நாடுகள் குழுவிற்கு பேராசிரியர் ரங்கித டி சில்வா டி அல்விஸ் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

நியூயோர்க்கிலுள்ள இலங்கையின் நிரந்தர தூதரகம், ஏனைய இலங்கை தூதரகங்கள்/பதவிகளுடன் இணைந்து தேர்தல் வெற்றிக்காக பிரச்சாரம் செய்திருந்தது.

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில், இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) சாதனை பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபையில் (ECOSOC) உயர் மட்ட அரசியல் மன்றத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி மன்றத்தால் (SDC) வழங்கப்பட்டது[2], இலங்கையின் மையப்புள்ளியாக, 2022 யூன் மாதத்தில் உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி அறிக்கையின்படி, தொடர்ந்து இரண்டாவது தடவையாக, இலங்கை உலகளாவிய தரவரிசையில் 11 நிலைகளால் மேலே முன்னேறி 2022 ஆம் ஆண்டில் 163 நாடுகளில் 76 ஆவது இடத்திலுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் நிலையான முன்னேற்றத்தைக் காட்டி 2021 ஆம் ஆண்டில், இலங்கை 7 இடங்கள் முன்னேறி 165 நாடுகளிடையே 87 ஆவது இடத்திற்கு முன்னேறியிருந்தது.

2.3 சவால்களை எதிர்கொள்ளுதல்

இருதரப்பு நன்கொடையாளர்கள் மற்றும் ஐ.நா மற்றும் அதனுடன் இணைந்த முகவர் நிறுவனங்கள் போன்ற பலதரப்பு அமைப்புகளுடன் இணைந்து, கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பின் உருவான நிதித் தடைகளை நிவர்த்தி செய்வதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. நாட்டினால் எதிர்கொள்ளப்பட்ட பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்காக (EFF) இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) அலுவலர் மட்ட உடன்பாட்டினை எய்தியமை இலங்கை அரசாங்கத்தின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும்.

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுடன் இணைந்த முகவரகங்களுடன் தொடர்ச்சியாக, உறுதியாக ஈடுபாட்டதன் விளைவே, இலங்கையில் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2022 ஆம் ஆண்டு யூன் 9 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுடன் இணைந்த முகவரகங்களால் ஆரம்பிக்கப்பட்ட 47.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் (HNP) ஆகும். வெளிநாட்டு அலுவல் அமைச்சு, வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகள், கொழும்பில் உள்ள வரிசை அமைச்சகங்கள் / முகவரகங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுடன் இணைந்து சொல்லப்பட்ட மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை ஒருங்கிணைத்து, வசதியேற்படுத்தியிருந்தது.

பொதுச் செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையொன்றாக, வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளின் அத்தியாவசியமற்ற பணியாளர் பதவிகளைக் குறைப்பதன் மூலம், இலங்கை

2 நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இலங்கையின் இரண்டாவது தன்னார்வ தேசிய மீளாய்வு (VNR) 700 இற்கும் மேற்பட்ட பல மட்ட அக்கறைதாரர்களின் ஆலோசனைகள் ஊடாக நடாத்தப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டிற்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தற்போதைய நிலை, போக்குகள், இடைவெளிகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய பகுப்பாய்வினை இந்த அறிக்கைகொண்டுள்ளது.

தூதரகங்கள் / வெளிநாட்டு பதவிகள் உள்ளடங்கலாக அமைச்சின் மீண்டெழும் செலவினங்களை பகுத்தாய்வதற்கு அமைச்சு பல முயற்சிகளை எடுத்திருந்தது. இதன்படி, அவற்றின் ஆணைகளை அருகிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளுக்கு அங்கீகாரம் மளித்து, அந்த நாடுகளுக்கு இடையே இடையூறு இல்லாத இராஜதந்திர உறவுகளை உறுதிசெய்து, மூன்று[3] இராஜதந்திர தூதரகங்களை / பதவிகளை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

அமைச்சின் தூதரகப் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களிலுள்ள அதன் பிராந்திய தூதரக அலுவலகங்களுக்கு வெளியே நீண்ட வரிசையில் நிற்பதை தவிர்க்கும் வகையில் இ-சனலிங் (e-channeling) முறைமையை அறிமுகப்படுத்தி, பொது மக்களுக்கு தூதரக சேவைகளை வழங்குவதில் அமைச்சு குறிப்பிடத்தக்க சாதனையை எட்டியுள்ளது. திடீரென அதிகரித்த சேவைகளின் தேவை காரணமாக தூதரக சேவைகளை வழங்குவது தொடர்பான பலதரப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்கின்ற அதேவேளையில், இந்த வருடத்தில் பொதுமக்களின் அனைத்து தூதரக கோரிக்கைகளையும் அமைச்சு உரிய நேரத்தில் ஏற்றுக்கொள்ள முடிந்திருந்து. 2022 ஆம் ஆண்டில், ஆவணங்கள் சரிபார்ப்பின் மூலம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 120% அதிகரிப்பு காட்டி, மொத்த வருமானமாக 386,892,508/- ரூபாவை அமைச்சு சம்பாதித்துள்ளது.

வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளுடன் இணைந்து, நாட்டின் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் பற்றாக்குறைக்கு ஆதரவளிப்பதில் அமைச்சின் அவசரகாலப் பதிலளிப்புப் பிரிவு குறிப்பிடத்தக்க பங்கை வகித்திருந்தது. இதன்படி, மீளாய்வுக் காலப்பகுதியில், மொத்தமாக 122 மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் இதர அவசரகாலப் பொருட்களை சுகாதார அமைச்சு உள்ளடங்கலான உரிய அதிகாரிகளிடம் பிரிவு கையளித்திருந்தது. 2022 செப்ரெம்பர் மாதத்தில் பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிலோன் தேயிலையின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்குவதற்கும் அமைச்சு உதவியிருந்தது.

2022 யூலை 19 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆட்களைக் கடத்தல் (TIP) அறிக்கையின் நிலை 2 இற்கு இலங்கை உயர்த்தப்பட்டிருந்து. இலங்கை, நிலை 3 இற்கு தரமிறக்கப்படுகின்ற பாரிய ஆபத்தினைக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாக நிலை 2 கண்காணிப்புப் பட்டியலில் தொடர்ந்தேர்ச்சியாக இருந்து வருகின்றது.

இந்த அறிக்கையானது, வெளிநாடுகளிலுள்ள உரிய தூதரகங்கள் / பதவிகள், சம்பந்தப்பட்ட அமைச்சுகள் / முகவரகங்கள், கொழும்பில் அமைந்துள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, ஒவ்வொரு பிரிவினாலும் ஆற்றப்படுகின்ற செயலாற்றுகை மீது கவனம் செலுத்தி, 2022 சனவரி 1 முதல் டிசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் அமைச்சின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்கின்றது.

2.4 செயலாற்றுகை பற்றிய கண்ணோட்டம்: ஒன்றுக்கொன்று இணைந்ததுறைகளைக் கொண்ட பிரிவுகள்

2.4.1 பொருளாதார விவகாரங்கள் பிரிவு

இந்த அமைச்சின் பொருளாதார விவகாரங்கள் பிரிவானது, வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு / பதவிகளுக்கு, இலங்கையிலுள்ள வரிசை அமைச்சுக்களுக்கும் / முகவரமைப்புக்களுக்கும் வசதியேற்படுத்தி, பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கு பொறுப்புவாய்ந்ததாகும். இந்தப் பிரிவு, இலங்கையின் பொருளாதார நலன்களை வெளிநாடுகளில் மேம்படுத்தி, பாதுகாத்து இலங்கை தூதரகங்களுக்கு / பதவிகளுக்கு, மூலோபாய வழிகாட்டலையும், ஆதரவையும் வழங்குகின்றது.

இப்பிரிவின் பிரதான பணி இலக்குகளிலொன்று, இலங்கை தூதரகங்களுக்கான / பதவிகளுக்கான பொருளாதார இலக்குகளைக் குறித்தொதுக்குகின்ற பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித்திட்டத்தை, சனாதிபதி அலுவலகம், பிரதம மந்திரி அலுவலகம், நிதி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த முகவரமைப்புகள், வர்த்தக திணைக்களம், முதலீட்டுச் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகார சபை, இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், வர்த்தக சம்மேளனங்கள், கூட்டு ஆடைத்துறை சங்கம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரமைப்பு, கொழும்பு பங்குச்சந்தை போன்ற அத்தகைய பல அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்துவதாகும்.

3 இலங்கைத் தூதரகம், பாக்தாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் சிட்னியிலுள்ள இலங்கை துணைத் தூதரகம்.

பொருளாதார விவகாரங்கள் பிரிவானது, வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு,வெளிநாட்டின் நேரடு முதலீட்டைக் கவருதல் மற்றும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளித்தல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை உள்ளடக்குகின்ற பயனுறுதிவாய்ந்த பொருளாதார இராஜதந்திரத்தினூடாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான இலக்கினைக் கொண்டிருக்கின்றது.

2.4.1.1 பொருளாதார விவகாரங்கள் (இருதரப்பு)

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி பெறுவதற்காக, கடன் மீள் கட்டமைப்பு செயன்முறையின் ஒரு அங்கமாக, கடன் வழங்கும் 23 நாடுகளுக்காக, சனாதிபதி அலுவலகத்தில் 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதி 'தூதுவர்கள் கூட்டம்'', சனாதிபதியின் டோக்கியோ மற்றும் மணிலா விஜயம் இந்தப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்திய கடன், அமெரிக்க மற்றும் சீன உதவி மற்றும் ஏனைய நன்கொடைகள் உள்ளடங்கலாக, இலங்கைக்கு ஆதரவளிப்பதற்காக வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதில் (எரிபொருள், கோதுமை, சீனி, உரம், மருந்துகள், இரசாயனங்கள், தொழிற்சாலைக்கான பொருட்கள், சிவில் விமானப்போக்குவரத்துக்கான உதவி போன்வை) இந்தப் பிரிவு உதவியாக விளங்கியிருந்தது. இந்தப் பிரிவு, எரிபொருள், குறுகிய கால நிதி வழங்கல், கடன்கள் போன்ற வற்றுக்கான முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்காக அரசாங்க மதிப்பீட்டுக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றி யிருந்தது. இந்தப் பிரிவு, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை சிங்கப்பூர், இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் நடத்துவதற்கு பணியாற்றியிருந்தது.

இந்த அமைச்சினதும், தூதரக பணியகங்களது / பதவிகளது வகிபாகத்தின் மீதான விசேட கவனத்துடன் சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்தற்காக ஐந்து (5) வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) ஊக்குவிப்பு நிகழ்வுகள் மற்றும் அக்கறைதாரர்கள் கூட்டங்கள் இந்தப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு தொடர்பிலான (16+), மெய்நிகர் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, வர்தக சுற்றுலா சம்மேளனங்களுடன் கூட்டமொன்று நடத்தப்பட்டு, வர்தகம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டிருந்தது.

இணை இலங்கை தூதரகங்கள் / பதவிகளுடன் ஒருங்கிணைந்து 2022 ஒக்டோபர் 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றிருந்த தேசிய டிஜிட்டல் உச்சிமாநாடு-2022 இற்கான நடவடிக்கை இந்தப் பிரிவினால் எடுக்கப்பட்டிருந்தது.

2022 சனவரியில் இடம்பெற்ற ஹங்கேரி- இலங்கை வணிக மற்றும் B2B கூட்டங்கள் அத்துடன் இந்த அமைச்சின் சட்டப் பிரிவுடன் கலந்தாலோசித்து, இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, சுற்றுலா ஊக்குவிப்பு ஆகிய துறைகளில் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களை / உடன்படிக்கைகளை நிறைவு செய்திருந்தது. ஒன்பது (9) வர்த்தக பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

2.4.1.2 பொருளாதார விவகாரங்கள் (பல்தரப்பு)

2022 மார்ச் 30 ஆம் திகதி ஐந்தாவது BIMSTEC உச்சிமாநாட்டிற்கு (மெய்நிகர்) தலைமைதாங்கி, பிரதானமான BIMSTEC கூட்டத்தினை (கலப்பின) இலங்கை நடத்தியிருந்ததுடன், உச்சிமாநாட்டில் பின்வரும் ஆவணங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன:

i. BIMSTEC சாசனம்
ii. குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவிக்கான BIMSTEC சமவாயம்
iii. BIMSTEC உறுப்பு நாடுகளின் இராஜதந்திர கல்விநிலையங்கள் / பயிற்சி நிறுவனங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மற்றும்
iv. இலங்கை கொழும்பில் BIMSTEC தொழில்நுட்ப பரிமாற்ற வசதியை (TTF) தாபிப்பதற்கான சங்கத்தின் விஞ்ஞாபனம்.

இதற்கு மேலதிகமாக, தலைவர்கள் போக்குவரத்து தொடர்புக்கான பிரதான திட்டத்தை கைக்கொண்டிருந்ததுடன், மீள உருவாக்கப்பட்ட துறைகள் மற்றும் ஒத்துழைப்பு உப துறைகளுக்கு அனுமதியளித்திருந்தனர்.

இலங்கை, பாரம்பரிய மருத்துவம் தொடர்பான BIMSTEC செயலணியின் நான்காவது கூட்டத்தை 2022 சனவரி 20 ஆம் திகதி இலங்கையில் கொழும்பில் நடத்தியிருந்ததுடன், விசேடமாக, ''விவசாயப் பொருட்களுக்கான மதிப்பு சங்கிலி முகாமைத்துவத்தில் தனியார் துறையின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான BIMSTEC செயலமர்வு: அறுவடையின் பின்னரான முகாமைத்துவத்தினூடாக, மதிப்பு சங்கிலிகளை விருத்திசெய்தல் 2022 ஒகஸ்ட் 15-16 ஆம் திகதிகளில் இலங்கையில் கண்டியில் நடத்தியிருந்தது.

இந்தியன் ஓசன் ரிம் அசோசியேசனின் (IORA) மையப் புள்ளியாக செயற்படுகின்ற இந்தப் பிரிவு 2021 நவம்பர் 15-17 ஆம் திகதிகளில் டாக்காவில் நடைபெற்ற சிரேஷ்ட அலுவலர்கள் குழுவினால் தலைமைதாங்கி நடத்தப்பட்ட 21 ஆவது அமைச்சர்களின் சபையில் இரண்டு வருட காலப்பகுதிக்கு (2021-2023) இலங்கை துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையிலான இலங்கை தூதுக்குழு இந்தியன் ஓசன் ரிம் அசோசியேசனின் துணைத் தலைவராக 22 ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் (COM), பங்கேற்றிருந்ததுடன், 2022 நவம்பர் 22 முதல் 24 ஆம் திகதி வரை டாக்காவில் நடைபெற்ற இந்தியன் ஓசன் ரிம் அசோசியேசனின் துணைத் தலைவராக 22 ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் (COM), தலைமை வகித்திருந்தது. 2 ஆவது நிறுவனம்சார் ஏற்பாடுகள் மற்றும் பரந்தளவிலான ஈடுபாட்டு (IABE) தொகுதி குழுமக் கூட்டம், நிறுவனம்சார் ஏற்பாடுகள் மற்றும் பரந்தளவிலான ஈடுபாட்டு (IABE) தொகுதி குழுமத்தின் ஒருங்கிணைப்பு நாடாக 2022 மார்ச் 2 ஆம் திகதி இலங்கையால் நடத்தப்பட்டிருந்தது.

தொழில்நுட்ப ஒத்துழைப்பு

பொருளாதார விவகாரப் பிரிவின் ‘‘தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம்’’ இலங்கை தனது நிபுணத்துவத்தை வழங்கக்கூடிய, சார்க், ஆசியா மற்றும் ஆபிரிக்க பிராந்தியத்தில் குறைந்தளவு அபிவிருத்தியடைந்த நாடுகளின் (LDC's) பங்கேற்பாளர்களுக்கு இலங்கையில் உள்ள வரிசை முகவரகங்களுடன் இணைந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்கு இலங்கையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதன் குறைந்தளவு அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஆதரவளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இலங்கை இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தது.

இதேவேளை, அமைச்சில் (இலங்கை வெளிநாட்டு சேவை, நிருவாக சேவை மற்றும் கணக்கியல் சேவை) சேவையாற்றகின்ற அலுவலர்களுக்காக பொருளாதார அலுவல்கள் பிரிவு முதன்முறையாக ஊடாடும் செயலமர்வை 2022 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது. பொருளாதார இராஜதந்திரத்தின் பங்கு, முதலீடுகளை ஈர்ப்பதற்கான மூலோபாயங்கள், இலங்கையின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு வெளிநாடுகளில் துடிப்பான சந்தைகளை ஆராய்தல், சுற்றுலாவை மேம்படுத்துதல், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல், தரவு தனியுரிமையைப் பாதுகாத்தல், சமூக ஊடகங்களின் பாதுகாப்பான பயன்பாடு, உலகளாவிய மற்றும் உள்ளூர் இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல், அரசு நிறுவனங்களுக்கு. தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு கொள்கை பற்றிய விழிப்புணர்வு. ஆகியவை குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி ஒத்துழைப்பு, யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்களின் பணியாளர்களுக்கு 190 குறுகிய கால நுழைவு விசாக்கள், 51 நீண்ட கால நுழைவு விசாக்கள் மற்றும் 72 குடியுரிமை விசாக்கள் ஆகியவற்றை இந்த பிரிவு சரிபார்த்து பரிந்துரைத்திருந்தது. முகவரகம் (JICA), கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA), கொழும்பு திட்ட செயலகம் போன்றவை, இலங்கைக்கான குறிப்பிட்ட பணிகளில் இருப்பவர்களாவர். நிதி அமைச்சின் கீழுள்ள நிலையான அபிவிருத்தி சபை உள்ளடங்கலான வரிசை அமைச்சுக்களால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்களுக்கு விசாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அரச மருந்துக் கூட்டுத்தாபனம், லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் மற்றும் சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட 100 பெறுகை அறிவித்தல்களை ஏற்பாடு செய்திருந்ததுடன், அறிவித்தல்களுக் போதியளவு விளம்பரம் வழங்குவதற்கும், அவற்றை அவர்களின் தூதரக / பதவிகளின் இணையதளங்களில் பதிவேற்றவும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு அலோசனை வழங்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகள் மூலம் சர்வதேச நிறுவனங்களின் சரிபார்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்ட தேசிய கனிமக் கொள்கை வரைவு ஆவணத்திற்கு பின்னூட்டல்கள் / எடுத்துரைப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

2.4.2 சர்வதேச பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு

எல்.டி.டி.ஈ (தமிழீழ விடுதலைப் புலிகள்) தொடர்பான விடயங்கள்: இப்பிரிவானது, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து தடைசெய்யப்படுவது தொடர்பாக உள்ளீடுகளை வழங்கி, தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைத்திருந்தது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இரண்டும் முறையே 2022 யூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் புலிகளின் தடைப் பட்டியலைத் தக்கவைத்துக் கொள்வதாக அறிவித்திருந்தன. இப்பிரிவு, ஐரோப்பிய ஒன்றியத்திற்காக இரண்டாவது சமர்ப்பிப்பைத் தயாரித்து, 2022 ஒக்டோபர் மாதத்தில் சமர்ப்பித்திருந்தது. ஆய்வின் தீர்மானம் 2023 பெப்ரவரி மாதத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆஸ்திரேலியாவின் பட்டியல் மறுசீரமைப்பு மேலும் 3 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். அமெரிக்காவின் மதிப்பாய்வு முடிவுக்காக காத்திருக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டியலை கனடாவில் தக்கவைத்துக்கொள்வதற்கு ஆதரவாக இந்த பிரிவு தகவல்களை சமர்ப்பித்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவதற்காக தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் (POAC) விண்ணப்பம் / மேன்றையீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஐக்கிய இராச்சிய அரசாங்க முகவரகங்களுக்கு தொடர்புடைய வரிசை முகவர்களின் ஆலோசனையுடன் இற்றைப்படுத்தப்பட்ட ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2023 யூலை / ஓகஸ்ட் மாதங்களில் தீர்ப்பு / முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பிரிவு, கனேடிய அதிகாரிகளால் இனப்படுகொலை அங்கீகரிக்கப்படுவதை எதிர்க்கும் நோக்கில், அமெரிக்காவின் கருமபீடத்திற்கும் மற்றும் ஓட்டாவா இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திடமும் சமர்ப்பித்துள்ளது. இத்தாலிய நகராட்சிகளால் இனப்படுகொலையை அங்கீகரிப்பதை எதிர்க்கும் நோக்கில் இந்த பிரிவு ஐரோப்பிய கருமபீடத்திற்கு சமர்ப்பிப்புகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட நாட்கள் மற்றும் நிகழ்வுகளில் வெளிநாட்டில் விடுதலைப் புலிகள் தொடர்பான சமூக ஊடகங்கள் மற்றும் அரசியல் செயற்பாடுகளை இனங்காண்பதை இப்பிரிவு தொடர்ந்து மேற்கொண்டிருந்தது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பினை விரிவாக்குதல்: புலனாய்வுப் பகிர்வு, பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) இப்பிரிவினால் ஆரம்பிக்கபட்டுள்ளன. இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. கைச்சாத்திடுவதற்கு பிலிப்பைன்ஸ் தரப்பிலிருந்து பதில் காத்திருப்பு. இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மீளாய்வு குறித்து தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. இந்தோனேசிய தரப்பிலிருந்தான பதிலுக்காக காத்திருக்கின்றது. அமெரிக்கா - இலங்கை (US-SL) பங்குடமை கலந்துரையாடலிற்கான உள்ளீட்டையும் இப்பிரிவு வழங்கி, பங்குபற்றியிருந்தது. பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு (CTED) நிறைவேற்றுப் பணிப்பாளர் (2022 யூலை) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் சந்திப்பிற்கும் மற்றும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) தொடர்பான கூட்டங்களுக்கும் (2022 செப்டெம்பர்) இப்பிரிவு உள்ளீடுகளை வழங்கியிருந்தது.

உள்நாட்டு தற்காப்பு, பாதுகாப்பு மற்றும் சட்ட முகவரகங்களின் இயலளவு விருத்தி: சட்டமா அதிபர் திணைக்களம், ஆயுதப் படைகள், நீதி அமைச்சு போன்றவற்றின் அலுவலர்களுக்காக, ஏனைய அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளால் (உ.ம்: - ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் - UNODC) வழங்கப்பட்ட இயலளவினை விருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களையும் இப்பிரிவு ஒருங்கிணைத்திருந்தது.

வன்முறை தீவிரவாத முயற்சிகளைத் தடுப்பதற்கும்/எதிர்ப்பதற்குமான ஆதரவு: வெளிநாடுகளில் வாழ்கின்ற மற்றும் இலங்கையில் ஆர்வமுள்ள பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதில் இப்பிரிவு தொடர்ந்து ஒருங்கிணைந்திருந்ததுடன், இலங்கை அரசாங்கத்திலுள்ள உரிய முகவரகங்களுக்கும், வெளிநாட்டு முகவரகங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை வலுப்படுத்தி ஆதரவளித்திருந்தது. உலகளாவிய சமூக ஈடுபாடு மற்றும் மீள்திறன் நிதியத்துடன் (GCERF) - வன்முறை தீவிர வாதத்தைத் தடுப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவிய நிதியம்) இலங்கைக்கான அதன் துரித நிதிப் பொறிமுறையின் கீழ் திட்டங்களைக் கண்டறிந்து நிதியத்தை ஒருங்கிணைப்பதற்காக கூட்டங்கள் நடத்தபபட்டிருந்தன. மூன்றாவது தொகுதி துணை உதவியளிக்கப்பட்டவர்கள் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். UNODC தெற்காசிய வலையமைப்பின் கீழ் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பது மற்றும் எதிர்கொள்வது, 2022 மார்ச் மாதம் மாலேயில் நடைபெற்ற SAN-PVE இன் வழிமுறைகள் மற்றும் வேலைத் திட்டம் குறித்த 4 ஆவது உயர்நிலை மற்றும் தொழில்நுட்பக் கூட்டங்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவில் வெளிநாட்டு அமைச்சினை இந்தப் பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. SAN-PVE க்கான தேசிய தொடர்பு மையமாக, UNODC

பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதலைத் தடுத்தல்: ருளுேஊசு 1373 இனைப் பிரகடனப்படுத்துவதற்காக, 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட நபர்களின் மற்றும் நிறுவனங்களின் பட்டியலை மதிப்பாய்வு செய்வதற்காக தேசிய புலனாய்வுத் தலைவரால் கூட்டப்பட்ட அலுவலர்கள் குழுவில், பிரதி சட்ட ஆலோசகருடன் இணைந்து, இப்பிரிவு, வெளிநாட்டு அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. புதிய பட்டியல் 2022 ஓகஸ்ட் 1 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருந்தது. Countering Terror Financing: Together with the Deputy Legal Adviser, the

2.4.3 சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற பிரிவு

சதுப்புநில சூழலியல் மற்றும் வாழ்வாதாரங்கள் (MELAG) மீதான பொதுநலவாய நீலப் பட்டய செயற் குழு: 2018 ஏப்ரல் மாதத்தில் லண்டனில் நடந்த பொதுநலவாய அரசாங்கத் தலைவர்கள் கூட்டத்தில் பொதுநலவாய நீலப் பட்டய (CBC) கைக்கொள்ளப்பட்டது. நீலப் பட்டயம் மூலம், பொதுநலவாய நாடுகள் கடலுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், தேசிய மற்றும் சர்வதேச கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தீவிரமாக ஒத்துழைப்பதற்கு இணங்கியிருந்தன. பொதுநலவாய நீலப் பட்டய செயல் குழுமங்கள், நீலப் பட்டயத்தை செயற்படுத்துகின்றன. இந்தப் பிரிவு, இலங்கையில் பொதுநலவாய நீலப் பட்டயத்தின் மையப் புள்ளியாகும். இலங்கை சதுப்புநில சூழலியல் மற்றும் வாழ்வாதாரங்கள் (MELAG) தொடர்பான பொதுநலவாய நீலப் பட்டய செயல் குழுமம் சாம்பியன் பட்டத்தை வென்றிருந்தது. இந்தப் பிரிவு சதுப்புநில சூழலியல் மற்றும் வாழ்வாதாரங்களுக்கான ஒருங்கிணைப்பு மையப் புள்ளியாகும். இப்பிரிவின் பணிப்பாளர் நாயகம், சதுப்புநில சூழலியல் மற்றும் வாழ்வாதாரங்களின் (MELAG) நிகழ்வில் ருகேஊஊஊஊ COP27 குழாத்தின் ஒருவராக கலந்து கொண்டு சதுப்புநில சூழலியல் மற்றும் வாழ்வாதாரங்கள் பற்றி இலங்கையின் தலைமைத்துவம் மற்றும் சதுப்பு நிலச் சுற்றாடலைப் பாதுகாத்தலை மற்றும் புனரமைப்பதை உறுதிசெய்வதற்காக இலங்கை எடுத்துள்ள வெற்றிகரமான முன்முயற்சி களை வெளிப்படுத்துவதற்காக கலந்துகொண்டிருந்தார். ழுஉநயெ

இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் [IORA] உடன் ஈடுபடுதல்:

இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் [IORA] உடன் ஈடுபடுதல்: கடல்சார் காப்பு மற்றும் பாதுகாப்பு மீதான இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் பணிக்குழுவுக்கான (WGMSS) ஒருங்கிணைப்பு நாடாக இலங்கையின் கடமைகளை மற்றும் கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கும், 2027 வரை கடல்சார் காப்பு மற்றும் பாதுகாப்பு பணிக்குழுவின் பொறுப்பின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் இந்தப் பிரிவு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன்படி, இந்தப் பிரிவு பின்வரும் நிகழ்வுகளை ஆரம்பித்திருந்தது / நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்தது:

i. 2 ஆவது கடல்சார் காப்பு மற்றும் பாதுகாப்பு மீதான இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் பணிக்குழுவின் வேலைத் திட்டத்தில் (2022-2026) தரப்படுகின்ற செற்பாடுகளை மேற்கொள்வதற் காக பணிக்கப்பட்ட உரிய முகவரகங்களின் பங்குபற்றுதலுடன் 3 அக்கறைதார்களின் கூட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன்

ii. ஒரு குழு, முக்கியமான உட்கட்டமைப்புப் பாதுகாப்பை நிவர்த்தி செய்வதில் பிராந்திய அணுகு முறைக்கு ஒத்திசைவான அணுகுமுறையை உருவாக்குவது, இரண்டாவது குழு, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நாடுகடந்த குற்றங்களைத் தடுப்பதற்கான இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான பகுத்தறிவு குறித்த கருத்துக் குறிப்பை வகுத்தமைப்பது என 2 குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன்

iii. இலங்கை கடற்படை தற்போது 2023 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில் திருட்டு எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் கப்பலுக்கு வருகை தருதல் தேடுதல் மற்றும் கைப்பற்றுதல் (VBSS) பயிற்சி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான முன்மொழிவொன்றை தற்போது கருத்துருகொடுத்துக்கொண்டிருக்கின்றது ˙ அத்துடன்,

உறுப்பு நாடுகளின் சட்ட அமுலாக்க முகவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு கடல்சார் பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பகிர்வது தொடர்பான பிராந்திய சட்ட அமுலாக்க முகவர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்வதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கு 2023 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டில் பிராந்திய மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை கடலோரக் காவல்படை ஆதரவளிக்கின்றது.

இந்தப் பிரிவு, பகிரப்பட்ட கடல்சார் காப்பு மற்றும் பாதுகாப்பு அக்கறைகள் அதேபோன்று கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் (UNCLOS) கட்டமைப்பிற்குள் இவற்றை நிவர்த்தி செய்வதற்கான சட்டக் கடப்பாடுகள் மற்றும் சாத்தியக்கூறுகளை இனங்காணுவதற்கு IORA உறுப்பு நாடுகள் மற்றும் IORA

செயலகத்தின் பிராந்திய ரீதியிலான இயலுமைகளை அதிகரிப்பது மற்றும் மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தும் மூன்று [3] நாள் செயலமர்வுடன் இணைத்து இலங்கையால் நடத்தப்பட்ட றுபுஆளுளு இன் 3 ஆவது கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஜேர்மனியின் சர்வதேச சமாதானம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான மக்ஸ் பிளாங்க் ஆதாரமன்றத்துடன் [MPFPR] ஒருங்கிணைந்திருக்கின்றது. இந்தியன் ஓசன் ரிம் அசோசியேஷன் [IORA] செயலகம், மக்ஸ் பிளாங்க் ஆதாரமன்றத்தின் முன்மொழிவுக்கு அனுமதியளித்துள்ளது.இந்தப் பிரிவு, இலங்கை அரசாங்கத்திற்கு எதுவித நிதிச் சுமையுமின்றி தற்போது மக்ஸ் பிளாங்க் ஆதாரமன்றத்தினால் நிதியிடப்பட்ட பயிற்சிச் செயலமர்வுடன், 2023 மார்ச் 20 முதல் 24 வரை 3 ஆவது WGMSS கூட்டத்தை ஏற்பாடு செய்து, பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

'புளூ பிளனெட்" நிதியம் - சமுத்திரம்சார் நாட்டு பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்துடனான (BPF-OCPP) (Blue Planet Fund - Ocean Country Partnership Program (BPF-OCPP) இலங்கையின் ஈடுபாடு : ஐக்கிய இராச்சியம் £500 மில்லியன் புளூ பிளனெட் நிதியத்தை (BPF) நிறுவுவதில் ஈடுபட்டிருந்தது. புளூ பிளனெட் நிதியமானது கடல்சார் பிரச்சினைகளில் ஐக்கிய இராச்சியம் உலகளாவிய தலைமையை மீள்வலுப்படுத்துவதுடன், ஐக்கிய இராச்சியம் கூட்டு UK-Vanuatu தலைமை யிலான CBC செயல் குழுவான "காமன்வெல்த் கிளீன் ஓஷன் அலையன்ஸ் [CCOA]' மூலம் கடலில் நுழையும் பிளாஸ்டிக் மாசுபடுத்தலை நிவர்த்தி செய்வதற்கான ஐக்கிய இராச்சியத்தின் தற்போதைய கடமைகளை வலுப்படுத்துகின்றது. 'GSh gpsndl;' நிதியம் - சமுத்திரம்சார் நாட்டு பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் (BPF,OCPP) கடல் பல்லுயிர், நிலையான கடல் உணவு மற்றும் கடல் மாசடைதல் ஆகிய 3 முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளைக் கொண்டுள்ளது. சமுத்திரம்சார் நாட்டு பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது, ODA தகுதியுள்ள தரப்பு நாடுகளின் தெரிவுடன், இதன் முதல் வருடத்தில் £5.7 மில்லியன் ஒதுக்கப்பட்ட 'GSh gpsndl;' நிதியம் மூலம் நிதியளிக்கப்பட்ட தொடர் திட்டங்களின் ஒன்றாகும். தொழில்நுட்ப உதவி பங்குடமை ஊடாக சுற்றுச்சூழல், உணவுத் துறையைச் சேர்ந்த குழு சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய அலுவல்கள் திணைக்களம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சுற்றாடல், கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு விஞ்ஞான மத்திய நிலையம் ஆகியவற்றிலிருந்து குழுவொன்று 2022 மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்துடன், ஒ.சி.பி.பியின் கீழ் வரும் 3 முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் கவனம் செலுத்தும் அரசாங்க பங்குதாரர்கள் மற்றும் நிபுணர்களுடன் தொடர்ச்சியான ஆரம்ப சந்திப்புகளை நடத்தியிருந்ததுடன், தேசிய குழு ஒன்றினைத் தாபிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டிருந்தது. 30 X 30 சமுத்திர முன்முயற்சியில் பங்குதாரர்களுடனான சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய அலுவல்கள் திணைக்களம் கலந்துரையாடுவதற்கான தயாரிப்புகளில், இந்த பிரிவு எம்.பி.ஏ.க்களையும் (MPA) உள்ளடக்கிய, கடல் இடம்சார்ந்த திட்டமிடல் (எம்.எஸ்.பி) குறித்த இலங்கை பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் அமர்வொன்றையும் ஏற்பாடு செய்திருந்தது. இப்பிரிவானது, 2022 யூலை மாதத்தில் மற்றுமொரு தொடர் மெய்நிகர் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது, அவை ஐந்து (5) குழுமங்களில் உள்ள முக்கிய பங்குதாரர் முகவர் நிறுவனங்களுடன் கடல் இடம்சார் திட்டமிடல் பற்றிய பகிரப்பட்ட புரிதலையும், இலங்கையின் பொருளாதார பொருளாதார மண்டலத்தில் கடல் இடம்சார் திட்டமிடலின் தேவையையும் கட்டியெழுப்புவதற்காக நடத்தப்பட்டிருந்தன.

காலநிலை மற்றும் பெருங்கடல் இடர் பாதிப்பு சுட்டி [CORVI] விரைவான மதிப்பீடு: இது இலங்கையின் மேற்கு மாகாணத்திற்காக ஸ்டிம்சன் நிலையம்-அமெரிக்கா வழங்கிய தொழில்நுட்ப உதவியுடன் பொதுநலவாய நீலப் பட்டயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி கருத்திட்டமாகும். இந்த புதிய மதிப்பீடு, இலங்கையின் தீவிர வெப்பநிலை மற்றும் கடலோர வெள்ளத்தால் பாதிக்கப்படுவதைக் கண்டறிந்து, கரையோர சமூகங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான முதலீடுகள் மற்றும் பரிந்துரைகளை இனங்காண்கின்றது. இலங்கையின் கரையோர நகரங்கள் மற்றும் தாழ்வான பகுதிகள் காலநிலையின் விளைவால் ஏற்பட்ட நிலைமைகளால் பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டி, பொதுநலவாய செயலகத்துடனான தீவிர ஈடுபாட்டின் ஊடாக இந்த முன்னோடிக் கருத்திட்டத்திற்காக சிறிய தீவுகளை விருத்தி செய்கின்ற நாடுகளுக்கு (SIDS) அப்பால் இனங்காணப்பட்ட ஒரேயொரு நாடாக இலங்கை விளங்கியிருந்தது.

சர்வதேச கடற்தாவர தினம் (மார்ச் 1): " சர்வதேச கடற்தாவர தினமாக" மார்ச் 1 ஆம் திகதியை குறித்தொதுக்குவதற்கு, '' ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தீர்மானத்தை கைக்கொள்வதற்கு நீல வள நம்பிக்கைப் பொறுப்பிலிருந்தி தொழில்னுணுக்க நிபுணத்துவத்துடன், BDS-MoE மற்றும் புருன்/நியூயோர்க் ஆகியவற்றுடன் இந்த பிரிவு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பகுதியில் வெளிநாட்டு கப்பல்களால் நடத்தப்படும் கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி (MSR) பற்றிய வழிகாட்டிநெறிகள் மற்றும் ஒழுங்கவிதிகளை விருத்திசெய்தல்: இந்த செயன்முறை 2018 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவுடன் இணைந்து செயற்படும் நிறுவனங்களுக்கு இடையேயான பங்குதாரர் செயன்முறையுடன் ஆரம்பித் திருந்தது. நிறைவுசெய்யப்பட்ட வழிகாட்டிநெறி, அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பப்படும். இருப்பினும், இப்போது அதே உரையானது, கடல் மற்றும் வான்வழி இரண்டுக்குமான SOP யினை நிறுவுவதில் கவனம் செலுத்தும் ஒரு பெரிய ஆவணத்துடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பிரிவு 2022 ஆம் ஆண்டில் 2 வெளிநாட்டு MSR கப்பல்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய நீர்மூழ்கிக் கப்பல்கள் பாதுகாப்பு மற்றும் மீள்திறன் கட்டமைப்பு: இந்தப் பிரிவு, UNODC-GMCP மற்றும் TRCSL ஆகியவற்றுடன் இணைந்து உரையை உருவாக்கி, சனாதிபதியின் செயலாளரிடம் (தொழில்நுட்ப அமைச்சு அவரது அதிகாரத்திற்குட்பட்டது என்பதால்) 2021 யூலை மாதத்தில் வழங்கியிருந்தது 2021/06/21 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை முடிவினூடாக, வுசுஊ சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டு, அதன் முடிபு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. முக்கியமான தகவல் உட்கட்டமைப்பை (CII) பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குகின்ற சைபர் பாதுகாப்பு வரைவு சட்ட மூலத்திற்கு இறுதி வடிவமளிக்கப்பட்டு சட்ட வரைஞரின் கருத்துக்காக அனுப்பப்பட்டு, அதன் பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். கட்டுக்கோப்பின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்காக மாண்புமிகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் TRCSL மற்றும் இந்த பிரிவு ஆகியவை 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி கூட்டமொன்றிற்கு அழைக்கப்பட்டிருந்தன. முன்னோக்கி செல்கையில், மாண்புமிகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு பரிந்துரைத்திருந்தார்.

i. நீர்மூழ்கிக் கப்பல் கேபிள்களைப் பாதுகாப்பதற்கான புதிய சட்டத்தை இயற்றுவதற்கான புதிய செயன் முறையைத் ஆரம்பித்தல்
ii. புதிய சட்டவாக்கத்தை ஆரம்பிப்பது பற்றி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சனாதிபதி அலுவலகம் கடிதம் எழுதுதல் அத்துடன்
iii. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, புதிய சட்டத்தைப் பின்பற்றுவதற்கும் / மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தில் திருத்தங்களைப் பின்பற்றுவதற்கும்.

2.4.4 வெளிநாட்டு இலங்கையர்கள் பிரிவு

வெளிநாட்டு இலங்கையர்களுடன் மேம்படுத்தப்பட்ட ஈடுபாடு தொடர்பில் அமைச்சின் முயற்சிகளைத் தொடர்ந்து வெளிநாட்டு இலங்கையர்கள் பிரிவு 2021 ஒக்டோபர் மாதத்தில் தாபிக்கப்பட்டது, இது வெளிநாட்டு இலங்கையர்களின் புள்ளிவிபரங்களைப் பேணுதல், இலங்கை மற்றும் அதன் வெளிநாட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் வெளிநாட்டு இலங்கையர்களுடன் நிலையான ஈடுபாட்டிற்கான வழிகளை இனங்காண்பதில் இப்பிரிவு கவனம் செலுத்துகின்றது. இந்த நோக்கத்திற்காக, இப்பிரிவு இலங்கையர்களைத் தொடர்புபடுத்துதல் இணைய நுழைவாயில் மற்றும் மத்திய தரவுத்தளத்தை பராமரிக்கின்றது. தூதரக தரவுகளின்படி, 2022 செப்டெம்பர் மாதமளவில் சுமார் 1.5 மில்லியன் வெளிநாட்டு இலங்கையர்கள் காணப்படுகின்றனர்.

வெளிநாட்டு இலங்கையர்களின் தகவல்களைத் தொகுப்பதற்கான 'Contact Sri Lanka' என்ற இணைய நுழைவாயில் வலைத்தளமானது, இலங்கையர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்காக, கோவிட்-19 தொற்றுநோய் ஏற்பட்ட தருணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், வெளிநாட்டு இலங்கையர்களின் பல கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டன. தற்போது, இந்த அமைச்சு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்துடன் (ICTA) ஒருங்கிணைந்து வலைத்தளத்திலுள்ள நுழைவாயில் சிக்கல்களைத் தீர்க்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்துடன் தொடர் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் இங்கு நுழைவாயில். உயரிய வினைத்திறனுள்ள செயலாற்றுகைக்குத் தேவையான மேலதிக முன்னேற்றங்களை இனங்காண்பதற்கு இப் பிரிவிற்கு இயலுமாயிருந்தது.

இலங்கை தூதரகங்கள் / பதவிகள் மூலமாக மாதாந்த அடிப்படையில் வெளிநாட்டு இலங்கையர்களின் தரவுகளைச் சேகரிக்கும் பணியில் இப்பிரிவு தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. புலம்பெயர்ந்தோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்காக இந்த ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தையும் இப்பிரிவு கண்காணிக்கின்றது. 'கூகுள்' படிவத்தின் ஊடாக இலங்கைத் தூதரகங்களால் / பதவிகளால் விபரங்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன், 2022 டிசெம்பர் மாத இறுதியளவில் இந்தப் பிரிவில் 2872 பதிவுகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE), தொழில் அமைச்சு போன்ற அத்தகைய இலங்கையிலுள்ள வெளிவாரி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட தரவு சேகரிப்பு கோரிக்கைகளையும் இப்பிரிவு நிறைவேற்றுகின்றது.

கல்வி அமைச்சு மற்றும் புத்தசாசன, மத அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில், வெளிநாட்டு இலங்கையர்கள் தலைமையிலான வணிக, சமய மற்றும் கலாசார அமைப்புகளின் விபரங்களை இந்தப் பிரிவு வழங்கியிருந்தது. இறுதியான இற்றைப்படுத்தல் இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்றிருந்ததுடன், தற்போது இந்த பிரிவில் அத்தகைய வெளிநாடுகளிலுள்ள 886 சங்கங்களின் / அமைப்புக்களின தரவுகள் காணப்படுகின்றன. வெளிநாட்டு இலங்கையர்களுடன் அதிக தொடர்புகளை மேம்படுத்துவதற்கு இத்தகைய தரவுகளைப் பயன்படுத்த முடியும்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், அரச புலனாய்வு சேவை (SIS), கொழும்பில் உள்ள பிரித்தானிய, சுவிஸ் மற்றும் ஆஸ்திரேலிய தூதரகங்கள், போன்ற அத்தகைய இலங்கை அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன், மீள் அனுமதி உடன்படிக்கைகளின் கீழ்,

வெளிநாடுகளில் உள்ள சட்டவிரோத / அகதி அந்தஸ்து கொண்ட இலங்கையர்களை மீண்டும் அனுமதிப்பதற்கு / நாட்டிற்குத்திருப்பி அனுப்புவதற்கு இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. இலங்கைப் பிரசைகளை மீண்டும் அனுமதிப்பது தொடர்பான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு, 2022 சனவரி மாதத்தில் கொழும்பிலுள்ள சுவிட்சிலாந்து மற்றும் மாலைதீவு தூதரகத்துடன் இந்த பிரிவு நேரடியான கூட்டமொன்றை நடத்தியிருந்தது. சுவிஸ், பிரித்தானிய மற்றும் அவுஸ்திரேலிய தூதரகங்கள் மற்றும் தொடர்புடைய இலங்கை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து, 79 சட்டவிரோத வெளிநாட்டு இலங்கையர்களை சுவிட்சிலாந்திலிருந்து 2022 பெப்ரவரி முதல் ஓகஸ்ட் வரையிலும், 70 பேரை ஐக்கிய இராச்சியத்திலிருந்து 2022 மே முதல் ஓகஸ்ட் வரையிலும் மற்றும் 46 பேரை ஓகஸ்ட் மாதத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்தும் நாடு திரும்புவதற்கு உதவியளித்திருந்தது.

இப்பிரிவானது, கூட்டங்களில் பங்கேற்பதன் மூலம் 'வெளிநாட்டு இலங்கையர்களுக்கான வரைவுக்கான வரைவிலக்கணம்' உள்ளடங்கலான ஆவணங்களை தயாரிப்பதனூடாக வெளிநாட்டு இலங்கையர்களுக்கான செயலகத்தை உருவாக்குவதில் பங்களித்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மேலதிக செயலாளரின் (மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, தூதரக விவகாரங்கள் மற்றும் வெளிநாட்டு இலங்கையர்கள்) அறிவுறுத்தலின் கீழ், இப்பிரிவு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதுடன், உரிய வெளிநாட்டு நிறுவனங்களை இனங்காண்பதற்கு தூதரகங்கள் / பதவிகளை அணுகியிருந்தது. 'தகைமைச் சமன்பாட்டின்' தேவையை இனங்கண்டு, உரிய தகைமைக் கட்டுக்கோப்பை ஒப்பிடுவதற்கும், அபிவிருத்திக்கான பகுதிகளைக் கண்டறிவதற்கும் பயிற்சி யொன்றை தூதரகம் பொறுப்பேற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக, இலங்கையின் புலம்பெயர் வேலையாளர்களுக்கு சிறந்த தொழில் நியமங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் கைச்சாத்திடப்பட்ட தொழில் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்யும் முயற்சிகளுக்கும் இப்பிரிவு உதவியிருந்தது.

2.4.5 கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு

கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி பிரிவு (PP,R&HRD), அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில், கொள்கை நோக்கங்களைக் கண்டறிவதிலும், அவற்றைச் செயற்படுத்த வழிவகுப்பதிலும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இப்பிரிவு இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்கள் (SLFS) மற்றும் தூதரக பதவியினர்களின் தொழில் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட விடயங்களை ஒருங்கிணைத்து எளிதாக்குகின்றது.

பதவியணி சீரமைப்பு மற்றும் இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களுக்கான புதிய பதவி உயர்வுத் திட்டம்: காணப்படுகின்ற நிதிக் கட்டுப்பாடுகள், அமைச்சின் / தூதரகங்களின் பதவியினர் கட்டமைப்பின் விரிவாக்கம் மற்றும் அமைச்சு / தூதரகங்களின் தற்போதைய பதவியினர் கட்டமைப்பை மீள்மதிப்பீடு செய்ய வேண்டியதன் தேவையை கருத்தில் கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வழிகாட்டு தலின் கீழ், ஏனைய உள் அக்கறைதாரர்களின் ஒத்துழைப்புடன், இப்பிரிவானது, அமைச்சின் பதவியணி சீரமைப்பின் தேவை குறித்த பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டு காலப்பகுதியில் இப்பிரிவினால் பின்வரும் விடயங்கள் தொடர்பான குழுக்கள் அமைக்கப்பட்டு, இலகுபடுத்தப் பட்டது:

i. வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களின்/பதவிகளின் இயக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் பற்றிய விரிவான ஆய்வு.

ii. போட்டித் தேர்வுச் செயன்முறை மற்றும் கொள்கை உள்ளீட்டை வழங்குவதன் மூலம் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள சில வகைப்பாட்டிலுள்ள அலுவலர்களுக்கு வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் / பதவிகளில் சேவையாற்றுவதற்கான வாய்ப்புகளை இனங்காணுதல் மற்றும்

iii. இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்கள் தரம் III மற்றும் தரம் II இலுள்ள அலுவலர்களுக்கு ஏனைய நாடளாவிய

இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களின் சிறப்பு தரம் மற்றும் பிரமாணக் குறிப்பு : இப்பிரிவு இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களின் சிறப்புத் தரத்தை செயற்படுத்துவதற்கு, அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் பரந்தளவில் ஈடுபட்டுள்ளது. தகுதியான இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களிலிருந்து வெற்றிடமாகவுள்ள 17 சிறப்பு தர பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன்படி, 17 அலுவலர்கள் இலங்கை வெளிநாட்டு சேவை சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தனர். ஆட்சேர்ப்பு செயன்முறை மற்றும் சிறப்பு தர பதவிகளின் புதிய ஏற்பாடு உள்ளடக்குவதற்காக 2016 ஆம் ஆண்டின்

இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களிலிருந்து சேவைப் பிரமாணக்குறிப்பைத் திருத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் இப்பிரிவு ஒருங்கிணைந்துள்ளது.

அமைச்சின் செயல் திட்டம் (2022) : ஆய்வாண்டு காலப்பகுதியில் அமைச்சின் கொள்கை குறிக்கோள்களை அடையும் நோக்கத்திற்காக, அமைச்சின் ஏனைய பிரிவுகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களுடன் இணைந்து அமைச்சின் வருடாந்த செயலாற்றுகையை மதிப்பிடும் நோக்குடன், நிதியாண்டின் இறுதியில் அமைச்சுக்கான (2022) செயற்திட்டத்தை இப்பிரிவு தயாரித்துள்ளது.

தூதரகங்களின் விபரக்கொத்து (2021/2022): தூதரகங்களின் விபரக்கொத்து 2021/2022 தொகுக்கப்பட்டு, வெளியிடப்பட்டு, அமைச்சின் பிரிவுகள், வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடையே விநியோகிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக் கட்டுக்கோப்பு: வெளிநாட் அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை கட்டுக்கோப்பை தயாரிப்பதற்காக நிறுவப்பட்ட குழுவின் கூட்டங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்திருந்தது.

பரீட்சைகள்: 2022 யூன் 19 ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட இலங்கை வெளிநாட்டு சேவை நுழைவுத் தேர்வின் பகுதி-I இனை ஏற்பாடு செய்திருந்ததுடன், பரீட்சைகள் திணைக்களம் உட்பட, உரிய அரச அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் 2023 சனவரியில் சொல்லப்பட்ட பரீட்சையின் பகுதி-II இனை, நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பரீட்சை திணைக்களத்துடன் கலந்தாலோசித்து, வெளிநாடுகளிலுள்ள முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை -2020 (2022), இனை 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சு வெளியிட்டிருந்தது. அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து - வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் / பதவிகளிலுள்ள தனிப்பட்ட உதவியாளர் சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைக்கான -2021 (2022) வர்த்தமானி அறிவித்தலுக்கு இறுதிவடிவமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்: பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதியில், அமைச்சிலுள்ள இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களுக்கு அவர்களின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் திறனை மேம்படுத்தும் நோக்கில் 45 வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை இந்தப் பிரிவு ஏற்பாடு செய்து, ஒருங்கிணைத்திருந்தது. இப்பிரிவு அமைச்சின் அலுவலர்களுக்கு அமைச்சு மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தில் (டீஜனுவுஐ) 9 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தது. 2022 சனவரியில் பங்களாதேஷில் இருந்து வருகை தரும் வெளிநாட்டு சேவை அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டத்தையும், 2022 செப்டம்பரில் பாகிஸ்தானில் இருந்து வருகை தரும் பாதுகாப்பு சேவை அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டத்தையும் இந்தப் பிரிவு வழங்கியிருந்தது. இந்தப் பிரிவு 200 மணி நேர சிறப்பு தமிழ் மொழிப் பயிற்சி வகுப்பை ஒழுங்குசெய்து, ஏற்பாடு செய்திருந்தது. அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களுக்கு சேவையின் தேவையை பூர்த்தி செய்வதற்காக. இப்பிரிவு 2022 ஒக்டோபர் மாதத்தில் இலங்கை பொலிஸ் அலுவலர்கள் முப்பத்தைந்து (35) பேருக்கு இராஜதந்திர நடைமுறை குறித்து விழிப்புணர்வு அமர்வை நடத்தியிருந்தது. 2022 டிசம்பர் மாதத்தில் 14 நாடுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 15 தூதரத்தின் / பதவிகளின் தலைவர்கள் அடங்கிய குழுவிற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தையும் இப்பிரிவு நடத்தியிருந்தது.

2.4.6 பொது மக்கள் இராஜதந்திரப் பிரிவு

பொது மக்கள் இராஜதந்திரப் பிரிவு, தொழிற்பாட்டுப் பிரிவொன்றாகும். இது தகவல் பரப்புதல் மற்றும் வெளிநாடுகளில் இலங்கையின் தோற்றப்பாட்டை முன்னிறுத்துவதற்கு அரசாங்கத்திற்கும் வெளி நிறுவனங்களுக்கும் இடையிலான இடைமுகமாகவுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பாக நாட்டில் பொதுவாக நடைபெறும் நிகழ்வுகள் / சூழ்நிலைகளை இந்தப் பிரிவு உள்ளடக்குகின்றது. இப்பிரிவு, வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் / பதவிகளின் நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றிய தகவல்களையும் பரப்புகின்றது.

இந்தப் பிரிவானது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இராஜாங்க அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டிலுள்ள அனைத்து தூதரகங்களையும் / பதவிகளை உள்ளடக்குகின்ற இந்த அமைச்சின் அனைத்து ஊடகங்கள் மற்றும் பொதுத் தொடர்பாடலுடன் தொடர்புபட்ட செயற்பாடுளை மேற்கொள்கின்றது. அமைச்சிற்கும், இலங்கையின் நற்பெயருக்கும் தீங்கு விளைவிக்கும் செய்திகளின்

தினசரி இற்றைப்படுத்தல்கள் வெளிநாட்டமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவசியமான தாக கருதப்படும்போது மறுப்புகள் வெளியிடப்படுகின்றன. இப்பிரிவு முக்கியமான கூட்டங்கள், நிகழ்வுகள், விளக்கங்கள், கொள்கை முடிவுகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை முன்னோக்குடன் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பொது மக்கள் இராஜதந்திரப் பிரிவானது, வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் உட்பட 24 மணி நேரமும் செயற்படுகின்றது, இதனால் அமைச்சு / தூதரக ஊடக வெளியீடுகள் சரியான நேரத்தில் ஊடகங்களை சென்றடைகின்றன.

இந்தப் பிரிவு, உள்நாட்டு / வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் இணையச் செய்திகளில் அமைச்சு / இலங்கை தொடர்பான முக்கிய செய்திகளைக் கண்காணித்து, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், இராஜாங்க அமைச்சர், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சிலுள்ள அதிகாரிகள் மற்றும் அனைத்து தூதரகங்களுக்கும் / பதவிகளுக்கும் அறிவித்துள்ளது. அமைச்சிற்கும் இலங்கையின் நற்பெயருக்கும் தீங்கு விளைவிக்கும் செய்திகளின் தினசரி புதுப்பிப்புகள் வெளிநாட்டமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவசியமானதாக கருதப்படும் போது மறுப்புகள் வெளியிடப்படுகின்றன.

ஆய்வாண்டு காலப்பகுதியில், 265 அமைச்சின் ஊடக வெளியீடுகள், 14 அறிக்கைகள், 421 தூதரக செய்திகள் மற்றும் 116 அறிவித்தல்கள் உள்நாட்டு அச்சு மற்றும் இணைய ஊடகங்கள் மற்றும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு நிருபர்களுக்கு விநியோகிக்கப்பட்டன, தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஒளிபரப்பப்பட்டன

இந்த மீளாய்வுக் காலத்தில் இப்பிரிவானது ரூவிட்டர் 514 ரூவீட்டுகள்), முகநூல் (206 பதிவுகள்), A+bA+ஜ் (5 பதிவேற்றங்கள்) மற்றும் இன்ஸ்டாகிராம் (200 இடுகைகள்) மூலம் பொது உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு சமூக ஊடக தளங்களில் தினசரி ஈடுபட்டுள்ளது. இதன் இலக்குகாக பார்வையாளர்களுக்கு தகவல்களை திறம்பட அனுப்புவதற்காக அனைத்து தூதரகங்கள்/பதவிகள் பெரும்பாலும் சமூக ஊடக தளங்களில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. தூதரகங்கள் / பதவிகள் பொருந்தக்கூடிய வகையில் அமைச்சின் ரூவீட்கள் / பதிவு களை மீண்டும் ரூவீட் செய்வதற்கும் / மறுபதிவிடுவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றன.

இப்பிரிவானது, இலங்கையில் வெளிநாட்டு ஊடக பிரசித்தத்திற்கும் / படம் எடுப்பதற்கும் உதவுகின்றது. கோவிட்-19 உலகளாவிய பெருந்தொற்று காரணமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட காலம் பின்னடைவைக் கொண்டிருந்தாலும், ஒன்பது (9) படக்குழுவினரின் வருகைக்கு இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. உயர்மட்ட விஜயங்களை உள்ளடக்கிய பின்வரும் வெளிநாட்டு ஊடகக் குழுக்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் வருகைகளையும் இப்பிரிவு ஒருங்கிணைத்துள்ளது 2022 சனவரி 12 ஆம் திகதி ஹங்கேரியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக அமைச்சர் அதிமேதகு, பீட்டர் சேயியேர்டோ.

i. 2022 சனவரி 19 ஆம் திகதி, கொரிய குடியரசின் தேசிய சபையின் சபாநாயகர் கௌரவ ர்க் பியோங் - சேயுக்.
ii. 2022 சனவரி 28 ஆம் திகதி துருக்கி குடியரசின் வெளிநாட்டு அமைச்சர் அதிமேதகு மேவ்லுட் கவுசோக்ள்.
iii. 2022 மார்ச் 22-23 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் துணைச்செயலாளர் மேதகு விக்டோரியா நூலான்ட்.
iv. 2022 மார்ச் 28-30 இந்திய வெளியுறவுச் செயலாளர் கௌரவ டாக்டர் எஸ் ஜெய்ஷங்கர்.

2022 சனவரி மாதத்தில், 'வன் வேர்ல்ட மீடியா (One World Media) அணியின் வருகைக்கு இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்ததுடன், 'வன் வேர்ல்ட மீடியா' கோரியபடி, அமைச்சர்கள் / பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அலுவலர்கள், தொழில்துறை மற்றும் பெருநிறுவனத் தலைவர்களுடன் தொடர்ச்சியான நேர்காணல்களைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து, 'யுஎஸ்ஏ டுடே' யில் இலங்கை பற்றிய அறிக்கை, அனைத்து துறைகளிலும் உள்ள வணிக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளையும் எடுத்துக்காட்டியிருந்தது.

சனாதிபதி செயலகம், இவ்வமைச்சுடன் இணைந்து, 2022 மார்ச் 28 முதல் 30 வரை பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) 5 ஆவது வங்காள விரிகுடா உச்சி மாநாட்டை நடத்தியிருந்தது. இப்பிரிவு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடக குழுக்களுடன் உச்சிமாநாட்டை பிரசித்தப்படுத்துவதையும் பிரமுகர்கள் ஒருவருக்கொருவர் சந்திப்பதையும் உறுதி செய்தது.

ஆய்வாண்டு காலப்பகுதியில், இப்பிரிவு 5 முக்கிய விஜயங்கள் மற்றும் 9 தொகுப்புரைகளை உள்ளடக்குவதற்காக இலங்கையை தளமாகக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுடன் ஒருங்கிணைந்திருந்துடன், இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு 10 வதிவிட விசாக்களை நீடிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. 2022 டிசெம்பர் வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு 247 ஊடக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா ஊக்குவிப்பு தொடர்பான உள்ளூர் அமைச்சுகள்/ நிறுவனங்கள் பற்றிய முக்கிய மேம்பாடு குறித்த கொள்கை அறிக்கைகள் ஆகியவற்றுடன், தினசரி புதுப்பித்தல்களை, குறிப்பாக கோவிட் -19 தொற்றுநோய் பரவல் போன்ற, இலங்கையின் அவசரகால சூழ்நிலைகளின்போது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளுக்கு மத்தியில் தகவல்களை இப்பிரிவு தீவிரமாக பரப்பி வந்துள்ளது.

பொது மக்கள் இராஜதந்திரப் பிரிவு மூலோபாய தொடர்பாடல் அலகின் (SCU) பணிகளையும் ஒருங்கிணைத்து வருகின்றது. இது தொடர்பாக, முக்கியமான மற்றும் தலைப்புச்செய்திகள் சார்ந்த விவகாரங்களில் அமைச்சின் விவரணங்களைப் பரப்புவதற்கு முன்னணி சுயாதீன ஊடகங்களுடன் இப்பிரிவு தொடர்பு கொண்டது. மேலும், இலங்கை கடற்படையுடன் இணைந்து மூலோபாய தொடர்பாடல் அலகின் (SCU) இணையத்தளத்தை தொழிற்படுத்துவதற்கும் இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

2.4.7 சார்க் (SAARC) பிரிவு

சார்க் பிரிவு, சார்க் செயலகம், அதன் ஐந்து (5) பிராந்திய மையங்கள், சிறப்பு அமைப்புகள் மற்றும் உச்ச அமைப்புகளால் நடத்தப்படும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றது. இந்த பிரிவு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது. இப்பிரிவானது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து கொழும்பிலுள்ள சார்க் கலாசார நிலையத்தின் நிருவாக மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தேவைக்கேற்ப செயற்பட்டு வருகின்றது. மேலும், இப்பிரிவானது, சார்க் வீசா விலக்களிப்புத் திட்டத்தின் கீழ் விசா வழங்குவதற்கான சிபாரிசுக் கடிதங்களை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / முகவரகங்களுடன் இணைந்து வழங்குகின்றது.

சார்க் விசாக்கள் - 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு, எஸ்.வி.இ.எஸ் (SVES) இன் கீழ் வழங்கப்பட்ட சார்க் விசாக்களின் எண்ணிக்கை:

வகை A , 93 ஜபாராளுமன்ற உறுப்பினர்கள்: 43 (சார்ந்திருப்பவர்கள் - 33) / ஏனைய அலுவலர்கள்: 16 (சார்ந்தவர்கள் -01)]

வகை B இல்லை

சார்க் செயலகத்திற்கு இலங்கையிலிருந்து கருமபீட அலுவலரை ஆட்சேர்ப்பு செய்தல்: பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்தின் (BIDTI), அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றிய திரு.எஸ். எம்.கபில பண்டார, இலங்கையிலிருந்து கருமபீட அலுவலராக நியமிக்கப்பட்டு, சார்க் செயலகத்தில் 2022 சனவரி 6 ஆம் திகதி முதல் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். இப்பிரிவானது, திரு.பண்டாரவின் ஆட்சேர்ப்புச் செயன்முறைக்கு ஏற்பாடு செய்திருந்த்து.

சார்க் கலாசார நிலையம் (SCC): இவ்வருடத்தில் இடம்பெறவுள்ள செயற்பாடுகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பில் உள்ள சார்க் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பிரசாந்தி நாரங்கோடவுடன் 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. மாத்தறை, நவிமனையில் சார்க் கலாசார நிலையத்திற்காக பகுதியளவில் நிருமாணிக்கப்பட்ட கட்டிடம் தொடர்பாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய உரிய அலுவலர்கள் மற்றும் சார்க் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் 2022 ஒக்டோபர் 6 ஆம் திகதி கூட்டமொன்று நடைபெற்றிருந்தது.

சார்க் விவசாய நிலையம் (SAC): ‘‘சார்க் விவசாய நிலையத்திற்கும் (SAC) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பிற்படிப்பு நிறுவனத்திற்கும் (PGIA-UoP)’’ இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை இற்றைப்படுத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக 2022 செப்டம்பர் 21 ஆம் திகதி கல்வி அமைச்சின் (MoE) பணிப்பாளர் / வெளிநாட்டு கல்விப் பணிப்பாளர் திருமதி கிரிஷாந்தி மீகஹாபொலவுடன் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இந்ததப் பிரிவு இதனை கல்வி அமைச்சுடன் பின்பற்றுகின்றது. சார்க் விவசாய நிலையத்தில் (SAC) சிரேஷ்ட திட்ட நிபுணர் (பயிர்கள்) பதவிக்கான வெற்றிடத்திற்கான அறிவித்தலை வெளியிடுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், இலங்கை அலுவலர்களிடமிருந்து இரண்டு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன. டாக்காவில் உள்ள சார்க் வேளாண்மை மையம் (SAC) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டப்பிற்படிப்பு நிறுவனம் (PGIA-UoP) ஆகியவற்றுக்கு இடையேயான திருத்தப்பட்ட வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தம், பாதை மாற்ற முறையுடன், ஒப்புதலுக்காக / அவதானிப்புகளுக்காக வரிசை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சார்க் செயலகத்தின் கோரிக்கையின் பேரில், ”சார்க் விவசாய தொலைநோக்கு” என்ற தலைப்பில் செயற்பாட்டின் வரைவு மூலோபாய கட்டுக்கோப்பில் ஒப்புதலை / எண்ணங்களை / கருத்துக்களைக் கோரி 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி விவசாய அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டது.

சார்க் எரிசக்தி நிலையம் (SEC): பின்வரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் /உடன்படிக்கைகள் மீதான ஒப்புதலைப் பெறுவதற்காக வரிசை அமைச்சுடன் (மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது:

i. சார்க் பிராந்தியத்தில் வலுசக்தி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் தரமான மின் கொள்வனவு உடன்படிக்கை வார்ப்புருவை உருவாக்குவதற்கான ஆய்வுக்கான வரைவு நியதிமுறைகளுக்கு (ToR) 2022 மார்ச் 03 ஆம் திகதி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ii. சார்க் மற்றும் சர்வதேச புதுப்பிக்கத்தக்க வலுசக்தி முகவரகம் (IRENA) இடையே முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை 2022 டிசம்பர் 15 ஆம் திகதி மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்டது.
பின்வரும் இணையவழி / பௌதிக நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு ஏற்பாடு செய்திருந்தது:

iii. ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ADB) ஏற்பாடு செய்யப்பட்ட சார்க் நாடுகளிடையே எல்லை தாண்டிய மின்சக்தி வர்த்தகம் மற்றும் பிபிஏ குறித்த இணையவழிப் பயிற்சி 2022 மே 17 முதல் 26 ஆம் திகதி வரை நடத்தப்பட்டிருந்தது.

சார்க் செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தெற்காசியாவின் மின் தொடரமைப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைப்பதற்கான தொழில்நுட்ப நியமங்களை ஒருங்கிணைப்பதற்கான ஆய்வின் வரைவு விதிமுறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் சார்க் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது

சார்க் காசநோய் மற்றும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் நிலையம் (STAC) : சார்க் காசநோய் மற்றும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் நிலையத்தில் தொற்றுநோயியல் நிபுணர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (எச்.ஐ.வி / எய்ட்ஸ்) பதவிகளுக்கு தொழில்சார் பதவியினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான தகவல்களை பரப்பியிருந்தது. சுகாதார அமைச்சின் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வை.எல்.சுமல் நந்தசேன இந்த பதவிக்கு இலங்கையில் இருந்து விண்ணப்பித்துள்ளார்.

சார்க் அனர்த்த முகாமைத்துவ நிலையம் (SDMC): பின்வரும் இணையவழி பௌதிக நிகழ்ச்சித்திட்டங்களின் பங்குபற்றுவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.:

i. 2022 மார்ச் 15 அன்று "மாறிவரும் சூழலில் காலநிலை இடர் முகாமைத்துவம்" பற்றி வெபினார் றுநடியைச்

ii. "புவி கண்காணிப்பு தரவுகளைப் பயன்படுத்தி வறட்சி அபாயங்களை மதிப்பிடுதல் மற்றும் தெற்காசிய வறட்சி முகாமைத்துவ முறைமை (SADMS) இந்தியாவில் தெற்காசிய வறட்சி முகாமைத்துவ முறைமையில் (IU) 2022 ஓகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 2 வரை நடைபெற்றிருந்தது அத்துடன்

iii. இந்தியாவின் காந்திநகரிலுள்ள சார்க் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் டிசெம்பர் 5 முதல் 8 வரை "நகர்ப்புற மீள்திறன் மற்றும் நகரங்களை நெகிழ்திறன் மிக்கதாக மாற்றுதல்" குறித்த வதிவிடப் பயிற்சி செயலமர்வு. (வரிசை அமைச்சின் (நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு) இரண்டு அலுவலர்கள் இந்த செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்).

இயற்கை அனர்த்தங்களுக்கு விரைவான பதிலளிப்பு தொடர்பில் சார்க் உடன்படிக்கை மீதான இலங்கையின் மையப்புள்ளியின் விபரங்கள் உரிய அமைச்சின் (அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு) ஒருங்கிணைப்புடன் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

தெற்காசியப் பல்கலைக்கழகம் (SAU): தெற்காசியப் பல்கலைக்கழகத்தின் வழக்கமான தலைவரை 2022 யூலை 12 ஆம் திகதி நியமிப்பதற்கான செயன்முறைக்கு சம்பந்தப்பட்ட முகவரகங்களுடன் (பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு) ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. இலங்கையில் தெற்காசியப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ வளாகத்தை நிறுவுவது பற்றி கலந்தாலோசிப்பதற்காக, கல்வி அமைச்சின் பணிப்பாளர் வெளிநாட்டுக் கல்வி திருமதி கிரிஷாந்தி மீகஹாபொலவுடன் 2022 செப்டெம்பர் 21 ஆம் திகதி சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. தெற்காசியப் பல்கலைக்கழகத்தின் ஆளுங்குழுவில் சமர்ப்பிப்பதற்காக இது தொடர்பில் சார்க் பணிப்பாளர் நாயகம் கல்வி ஆரம்ப முன்மொழிவொன்றைக் கோரியிருந்ததுடன், தெற்காசியப் பல்கலைக்கழகத்தின் ஆளும் குழுவிற்கு அதை சமர்ப்பிப்பதற்காக தொடர்புடைய வரிசை முகவரகங்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. இந்தப் பிரிவு, இந்த விவகாரத்தை கல்வி அமைச்சுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. பல்லைக்கழங்கள் மாணிய ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரசிங்க, அவர்களுடனும், உரிய அலுவலர்களுடனும்

சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. 2022 டிசெம்பர் 28 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தால் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை வழங்குதல்.

தெற்காசிய பிராந்திய தரநியமங்கள் தாபனம் (SARSO): தெற்காசிய பிராந்திய தரநிலைகள் தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக டாக்டர் ஷாசாத் அப்சல் (Ph.D) அவர்களை நியமனம் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட முகவரகத்துடன் (Sri Lanka Standard Institution) ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. தரமான உட்கட்டமைப்பு மீதான SAARC-PTB ஒத்துழைப்பில் பங்கேற்பை ஏற்பாடு செய்திருந்தது: நேபாளத்தின் காத்மாண்டுவில் 2022 ஒக்டோபர் 11-12 ஆம் திகதிகளில் பயிற்சி செயலமர்வு நிறைவுபெற்றிருந்தது.

சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF): பங்களாதேஷின் டாக்கா பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் அதனது 6 ஆவது தொகுதிக்காக சார்க் அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிக்கப்பட்ட புனரமைப்பு அறிவியலில் முது விஞ்ஞானமாணிக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் அனுமதிகள் பற்றி உரிய வரிசை முகவரகத்துக்கு (சுகாதார அமைச்சு) 2022 செப்டம்பர் 23 ஆம் திகதி தகவல் வழங்கப்பட்டது. சார்க் பிராந்தியத்தில் சர்வதேச மாணவரகளுக்கான பதினைந்து (15) புலமைப்பரிசில்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2.4.8 ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு

இலங்கையின் பல்தரப்பு உறவுகள் என்பதன் பின்னணியில், நியூயோர்க், ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகங்கள், வியன்னா, பாரிஸ், ரோம், நைரோபி, பாங்கொக் மற்றும் ஹேக் போன்ற இடங்களில் இலுள்ள ஐ.நாவின் சார்புடைய முகவரமைப்புக்களுக்கு அங்கீகாரம் பெற்ற தூ தரகங்கள்/ நிரந்தர தூதுக்குழுக்கள் ஆகியவை, இப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் வருகின்றன.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் (ருபேயு) 77 ஆவது அமர்வு, நியூயோர்க், 2022 செப்டம்பர்: வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் உயர்மட்டப் பிரிவில் பங்கேற்பதற்கான கணிசமான மற்றும் ஏற்பாட்டியல் ஒழுங்குகளை அமைச்சு மேற்கொண்டிருந்தது. 2022 செப்டம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வு. 2022 செப்டம்பர் 24 ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் உயர்மட்டப் பிரிவில் உரையாற்றியிருந்துடன், 2022 செப்டம்பர் 21 ஆம் திகதி 77 ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் ஓரங்கமாக, தேசிய அல்லது இன, மத மற்றும் மொழிரீதியில் சிறுபான்மையினர்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தைப் பின்பற்றிய 30 ஆவது நினைவு தினத்தைக் குறிக்கும் உயர்மட்டக் கூட்டத்தில் பங்கேற்று, அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

பூகோள அபிவிருத்தி முயற்சி குறித்த நண்பர்கள் குழுவின் அமைச்சர்கள் கூட்டம், அணிசேரா இயக்கத்தின் (NAM) அமைச்சர்கள் கூட்டம், மாநாட்டின் வெளியுறவு அமைச்சர்களின் முறைசாரா சந்திப்பு உள்ளிட்ட ஏனைய உயர்மட்டக் கூட்டங்களிலும், ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் (CICA) மற்றும் 77 ஆவது நாடுகளின் பொதுச் சபையின் 77 ஆவது குழும உறுப்பு நாடுகளின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்களின் 46 ஆவது வருடாந்த கூட்டத்திலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பங்கேற்று அறிக்கைகளை வழங்கியிருந்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், பயங்கரவாத எதிர்ப்புக்கான ஐக்கிய நாடுகள் பிரதிச் செயலாளர் நாயகம், அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (யு.என்.டி.பி) உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோரை சந்தித்திருந்தார். மெரிக்க அரச செயலாளரை சந்தித்த அதேவேளையில், ஐக்கிய நாடுகள் சபையின் 77 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் தூ துக்குழுக்களின் தலைவர்களுக்கு அமெரிக்க அரச தலைவர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பில் அமெரிக்க சனாதிபதி ஜோ பைடனையும் அமைச்சர் சந்தித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் உயர்மட்ட அமர்வின் போது, அமைச்சர் ஐக்கிய இராச்சியம், சவுதி அரேபியா, உஸ்பெகிஸ்தான், ஆர்மேனியா, சோமாலியா, காம்பியா, நமீபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சீனா குவைத், பாகிஸ்தான், ஈரான், ஈராக் மற்றும் சூடான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு ஆலோசனைகளை நடத்தியிருந்தார். அமைச்சர், அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர், USAID இன் பிரதி நிருவாகி மற்றும் நேபாள வெளியுறவு செயலாளர் ஆகியோரையும் சந்தித்தார். இலங்கையின் நிரந்தர தூதரக வளாகத்தில் நடைபெற்ற முக்கோண பிரதேச இலங்கை சமூகத்தின் பிரதிநிதிகள் கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றியிருந்தார்.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் : ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஜெனீவா (49 ஆவது, 50 ஆவது மற்றும் 51 ஆவது அமர்வுகள்): ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நிலைப்பாட்டிற்கு ஆதரவைப் பெறுவதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அனைத்து உறுப்பினர்களுடனும், அனைத்து ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுடனும் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் அரச தலைவர் மட்டத்தில் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இந்தப் பிரிவு ஒருங்கிணைத்திருந்தது. 2021 மார்ச் (49 ஆவது அமர்வு), யூன் (50 ஆவது அமர்வு) மற்றும் செப்டெம்பர் (51 ஆவது அமர்வு) ஆகிய மனித உரிமைகள் பேரவையின் (HRC) வழக்கமான அமர்வுகளில் இலங்கையின் நிலைப்பாடுகள் இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. மனித உரிமை பேரவையின் 49 ஆவது மற்றும் 51 ஆவது அமர்வுகளின்போது, மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அறிக்கை மற்றும் இலங்கை தொடர்பான அவரது எழுத்து மூலமான இற்றைப்படுத்தல் மற்றும் விரிவான அறிக்கை என்பன முறையே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டபோது, தொடர்புபட்ட நாடு என்ற வகையில் இலங்கை அறிக்கையை கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வழங்கியிருந்தார். 2022 யூன் மாதத்தில் மனித உரிமை ஆணைக்குழுவின் 50 ஆவது அமர்வில் அமைச்சர் சிறப்பு அறிக்கையொன்றை வழங்யிருந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மார்ச், யூன் மற்றும் செப்டெம்பர் மாத அமர்வுகளின்போது, இலங்கை பல இடையீடுகளை மேற்கொண்டிருந்ததுடன், 23 கூட்டு அறிக்கைகள் மற்றும் 12 தீர்மானங்களுக்கு இணை அனுசரணையும் வழங்கியிருந்தது. கௌரவ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் (OMP), நாட்டிற்குத் திருப்பியனுப்பம் அலுவலகம (OR), தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR), இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) மற்றும் நிலைபேறான அபிவிருத்திப் பேரவை (SDG) உள்ளடங்கலான உள்நாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற 3 இணைப்புக் கூட்டங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்திருந்தது. 2022 ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில், மனித உரிகளைப் பேணுகின்ற விடயங்கள் தொடர்பாக அமைச்சரவையால் அமைக்கப்பட்ட சிரேஷ்ட அலுவலர்கள் குழுவின் இரண்டு கூட்டங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்திருந்தது.

உடன்படிக்கை அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் நடவடிக்கைமுறைகள் பணிப்பாணை வைத்திருப்போர் 9 முக்கிய ஐ.நா மனித உரிமைகள் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை தொடர்ந்து அறிக்கையிடல் கடமைகளை நிறைவேற்றும். 21 சம்பந்தபபட்ட அமைச்சுகளின் பங்கேற்புடன், பூகோள காலாந்தர மீளாய்வின் (UPR) 4 ஆவது சுழற்சியின் கீழ் இலங்கையின் தேசிய அறிக்கையை வரைவது தொடர்பாக அக்கறைதாரர்களின் ஆலோசனைகள் 2022 ஏப்பிரல் மாதத்தில் பெறப்பட்டிருந்தன.

பூகோள காலாந்தர மதிப்பாய்வின் 4 ஆவது சுழற்சி (UPR): 2022 டிசம்பர் 22 ஆம் திகதி, காலாந்தர மதிப்பாய்வின் 4 ஆவது சுழற்சிக்காக இலங்கையின் தேசிய அறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்திருந்தது. தேசிய அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் உரிய அரசு மற்றும் அரசு சாரா பங்குதாரர்களுடன் இந்தப் பிரிவு ஒருங்கிணைந்து ஆலோசனைகளை நடத்தியிருந்தது. 2022 நவம்பர் மாதத்தில் இரண்டு சிவில் சமூக ஆலோசனைகள் ஒருங்கிணைக்கப்பட்டன. 30 சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் முதலாவது சிவில் சமூக ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது, இரண்டாவது ஆலோசனையானது 35 சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வட மாகாணத்தில் நடைபெற்றிருந்தது. இரண்டு கலந்தாலோசனைகளும் கலப்பு வடிவில் நடைபெற்றிருந்தன என்பதுடன், சிவில் சமூகத்திலிருந்து பெறப்பட்ட உள்ளீடு ஆக்கபூர்வமான பங்களிப் பொன்றாகும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) ஆலோசிக்கப்பட்டு சுயாதீனமான அமைப்பொன்றாக அதன் உள்ளீட்டை வழங்கியிருந்தது.

இலங்கையின் காலாந்திர அறிக்கைகளை சமர்ப்பித்தல்: 2019 ஏப்ரல் 02-12 வரை சித்திரவதை தடுப்புக்கான ஐ.நா துணைக் குழுவின் (SPT) வருகையின் பின்னரான அறிக்கைக்கு 2022 டிசம்பர் 2 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் தனது பதிலைச் சமர்ப்பித்திருந்தது. OPCAT யின் 16 ஆம் உறுப்புரையின் படி, SPT இன் அறிக்கை மற்றும் இலங்கை அரசாங்கம் அனுப்பிய பதிலை இரகசியமாக வைத்திருக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. 2023 ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ICCPR இன் கீழ் இலங்கையின் 6 ஆவது காலாந்திர அறிக்கையின் மீளாய்வு தொடர்பான பிரச்சினைகளின் பட்டியலுக்கு 2022 மே 6 ஆம் திகதி இலங்கை தனது பதிலைச் சமர்ப்பித்திருந்தது. 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி இலங்கை, CEDAW இன் கீழ் தனது 9 ஆவது கால அறிக்கையை சமர்ப்பித்திருந்தது.

ஆயுதக்களைவு: சுட்டிக்காட்டப்பட்ட காலப்பகுதியில், ஐரோப்பாவில் மோதல்கள் வெடித்ததைத் தொடர்ந்து ஆயுதங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்ட இந்த காலகட்டத்தில், இலங்கை புவிசார் அரசியல் முன்னேற்றங்களுக்கு உணர்திறன் உடையதாக இருப்பதையும், ஆயுதக்களைவு தொடர்பில் ஒவ்வொரு அரங்கிலும் சமநிலையான அணுகுமுறையைப் பேணுவதையும் உறுதிப்படுத்துவதற்கு இப்பிரிவு செயற்பட்டு வருகின்றது. பல்தரப்பு ஆயுதக்களைவு முயற்சிகளுக்கான இலங்கையின் நீண்டகால அர்ப்பணிப்புக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆயுதக் குறைப்புக் கூட்டங்களில் இலங்கையின் பங்கேற்பு மற்றும்

அரசாங்கத்தின் நிலைப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உரிய இலங்கை தூதரகங்கள் மூலம் இப்பிரிவு தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. முக்கியமான ஈடுபாடுகளில் சில்

i. 2022 ஆகஸ்ட் 1 முதல் 26 வரை நடைபெற்ற அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT) அங்கம் வகிக்கும் தரப்புகளின் 10 ஆவது மீளாய்வு மாநாட்டில் இலங்கையால் 15 இற்கும் மேற்பட்ட தலையீடுகள் மேற்கொள்ப்பட்டிருந்தன்

ii. 2022 பெப்ரவரியில் நடைபெற்ற ஆயுதக் குறைப்பு தொடர்பான மாநாட்டில், வெளிநாட்டு அமைச்சர் தலையீடு மேற்கொண்டிருந்தார்

iii. இலங்கை பிரதி தலைவராக கடமையாற்றிய 2022 ஓகஸ்ட் 30 முதல் செப்டெம்பர் 2 வரை ஜெனீவாவில் கொத்தணி ஆயுதங்கள் தொடர்பான சமவாய நாடுகளின் 10 ஆவது கூட்டம் நடைபெற்றிருந்தது.

iv. "நிராயுதபாணியாக்குதல் மற்றும் சர்வதேச பாதுகாப்பு" என்ற தலைப்பில் 77 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது குழுவில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பயன்படுத்த வேண்டிய பொழிப்பை தொகுப்பதில் இப்பிரிவு முன்னணி வகித்திருந்தது. முதல் குழு, 2022 செப்டம்பர் 29 முதல் நவம்பர் 4 வரை நடைபெற்றிருந்தது. இந்த பிரிவு, முன்வைத்த 76 தீர்மானங்கள் / முடிபுகள் தொடர்பாக இலங்கையின் நிலைப்பாடுகளை வகுத்திருந்தது. இலங்கையின் PRUN / லே முதல் குழுவின் தலைவராக பணியாற்றியிருந்தார். பொது விவாதத்திலும், 6 தொகுதிகளிலும் இலங்கை அறிக்கைகளை வெளியிட்டிருந்தது.

v. இரசாயன ஆயுத சமவாயத் (CWC) தரப்புகளின் 27 ஆவது மாநாடு ஹேக்கில் 2022 நவம்பர் 28 - டிசம்பர் 02 வரை நடைபெற்றிருந்தது அத்துடன்

vi. IFE-2025 இனை நடாத்துவதற்காக இலங்கை நுழுஜ பற்றி 2022 நவம்பர் 30 முதல் டிசெம்பர் 7 வரை CTBTO விலிருந்து தளப் பரிசோதகர்களின் (OSI) உளவுப் பயணத்தை ஒருங்கிணைத்தல்.

vii. ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் (NPT) 10 ஆவது மீளாய்வு மாநாடு - 2022 ஆகஸ்ட் 1 முதல் 26 வரை நடைபெற்றது, இதில் இலங்கையால் 15 இற்கும் மேற்பட்ட இடையீடுகள் இலங்கையால் மேற்கொள்ளப்பட்டன.

viii. ஆயுதக்களைவு பற்றிய மாநாடு 2022 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இடையீட்டினை மேற்கொண்டிருந்தார்.

ix. கொத்தணிக் குண்டுகள் குறித்த அரச தரப்பினர் மாநாட்டின் 10 ஆவது கூட்டம் (CCM) 30 ஆகஸ்ட் முதல் 02 செப்டெம்பர் 2022 வரை ஜெனீவாவில் இடம்பெற்றது. இதில் இலங்கை துணைத்தலைவராக சேவையாற்றியிருந்தது.

'ஆயுதக்களைவு மற்றும் சர்வதேச பாதுகாப்பு' பற்றிய 77 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் முதல் குழுவில் இலங்கை அரசாங்க பிரதிநிதிகள் பயன்படுத்த வேண்டிய சுருக்கத்தை தொகுப்பதில் இப்பிரிவு முன்னணி வகித்தது. முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் / முடிபுகள் தொடர்பான இலங்கையின் நிலைப் பாடுகளையும் இந்தப் பிரிவு வகுத்திருந்தது. முதல் குழுவின் தலைவராக இலங்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் பல்தரப்பு ஈடுபாடு : இப்பிரிவு, சர்வதேச அணுசக்தி முகவரகத்துடன் (IAEA) இலங்கையின் ஈடுபாட்டை ஒருங்கிணைக்கின்றது. 2022 செப்டம்பர் 26 முதல் 30 வரை நடைபெற்ற 66 ஆவது சர்வதேச அணுசக்தி முகவரக பொது மாநாட்டில் இலங்கை தீவிரமாகப் பங்கேற்றிருந்தது. ஐக்கிய நாடு சைபர் குற்ற உடன்படிக்கையை விரிவுபடுத்துவதற்காக UNODC தற்காலிகக் குழுவுடன் தொடர்புடைய இலங்கையின் பங்கேற்பிற்கான இணை முகவரமைப்புக்களை இப்பிரிவு ஒருங்கிணைத்திருந்தது. இலங்கையின் பங்கேற்புடன் இவ்வருடம் இதுவரை மூன்று அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் (ICAO) 41 ஆவது பொதுச் சபைக்கான இலங்கை பிரதிநிதிகளின் பங்கேற்பை இப்பிரிவு ஒருங்கிணைத்தது மற்றும் எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடுகளை உருவாக்குவதற்கும் உதவியது. 2022 டிசெம்பர் 6 முதல் 9 வரை வியன்னாவில் நடைபெற்ற CTBT யின் 3 ஆவது அறிவியல் இராஜதந்திர நிகழ்ச்சித்திட்டத்தில், நிகழ்ச்சித்திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரிக்கின்ற அதேவேளையில், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 4 பேர் கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழு பங்குபற்றுவதற்கு, இப்பிரிவு ஒருங்கிணைப்பினை வழங்கியிருந்தது.

சமூக-பொருளாதார செயலெல்லையில் பல்தரப்பு ஈடுபாடு: சமூக-பொருளாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பலதரப்பு மன்றங்களில் இலங்கையின் ஈடுபாட்டை இந்தப் பிரிவு தொடர்ந்து

ஒருங்கிணைத்து வருகின்றது. இந்த மன்றங்களுடனான வழக்கமான ஈடுபாட்டுக்கு மேலதிகமாக, பிரிவு பின்வருவனவற்றை ஒருங்கிணைத்திருந்தது:

i. உணவு மற்றும் விவசாய தாபனம்(FAO): 2022 யூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இடம்பெற்ற இலங்கை மற்றும் மாலத்தீவிற்கான உணவு மற்றும் விவசாய தாபன பிரதிநிதி திரு விம்லேந்திர ஷ ரனின் வருகைக்கு இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்ததுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் ஏனைய பிரமுகர்களுடன் கூட்டங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.

ii. உலக உணவுத் திட்டம் (WFP): உலக உணவுத் திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் திரு. ஜோன் அய்லீ/ப் அவர்கள் 2022 செப்டெம்பர் 01 - 02 வரை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்தப் பிரிவானது, இந்த விஜயத்திற்கு ஏற்பாடு செய்திருந்ததுடன், பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோருடனான கூட்டங்களையும் ஒருங்கிணைத்திருந்தது. ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்களுக்கான அவசரகால நிதி- ருஜேஊநுகு: 2022 ஆகஸ்ட் 21 முதல் 27 வரை 'யுனிசெவ்வின்' தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளரான திரு. ஜோர்ஜ் லாரியா- அட்ஜேயின் வருகை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் ஏனைய உயர்மட்ட பிரமுகர்களுடன் கூட்டங்களை இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

iii. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP): ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டப் பிரதி பிராந்திய பணிப்பாளர் கிறிஸ்டோப் ஃஹட் 2022 ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு உதவியதோடு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைச் சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்திருந்தது. 2022 டிசம்பரில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஜஹ்காம் வெளிவிவகார அமைச்சருக்கு விடையளிக்கும் நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இலங்கைக்கான புதிய ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டாவுக்கு 2023 சனவரி மாதத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கும் வகையில் விசா மற்றும் தேவையான அனுமதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. உயர்மட்ட அரசியல் பிரமுகர்களுடன் (பிரதமர் மற்றும் வெளிநாட்ட் அலுவல்கள் அமைச்சர்) ஐ.நா- உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் பிராந்திய பணிப்பாளர் கன்னி விக்னார்ஜா ஆகியோருடான சந்திப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

iv. உலக சுகாதார தாபனம் :தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார தாபன பிராந்தியக் குழுவின் 75 ஆவது அமர்வு 2022 செப்டெம்பர் 5-9 வரை பூட்டானின் பரோவில் நடைபெற்றிருந்ததுடன், இந்தக் குழுவில் சுகாதார அமைச்சர் பங்கேற்பதற்கு இப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. மேலும், 75 ஆவது உலக சுகாதார பேரவை மற்றும் பிற உயர்மட்ட கூட்டங்களில் (செயற்குழுவின் 36 ஆவது கூட்டம், வரவு செலவு திட்டம் மற்றும் நிருவாக குழு மற்றும் நிர்வாக சபையின் 151 ஆவது அமர்வு) இலங்கையின் பங்கேற்பை இப்பிரிவு ஒருங்கிணைத்து எளிதாக்கியிருந்தது.

v. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் (UNHCR) : 2022 டிசெம்பர் 19 முதல் 22 வரை ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய பணியகம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயப் (ருரேஊசு) பணிப்பாளர் இந்திரிகா ரத்வத்தேவின் விஜயம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. உரிய அக்கறைதாரர்களுடன், 105 உறுப்பினர்களுடான குழுவுடன் அனர்த்தத்தில் சிக்கி வடக்கு கடலில் மிதந்த கப்லைக் காப்பாற்றுவதற்கு கடற்படையின் முயற்சிகளை ஒருங்கிணைத்தமை.

vi. பொருளாதாரம் மற்றும் சமூகப் பேரவை (ECOSOC):2022 யூலை மாதம் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக பேரவையின் (ECOSOC) நிலையான அபிவிருத்திக்கான உயர்மட்ட அரசியல் மன்றத்தில், நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவது தொடர்பான 20222022 ஆம் ஆண்டிற்கான 2 ஆவது தன்னார்வ தேசிய மீளாய்வு (VNR) அறிக்கையை இலங்கை சமர்ப்பித்தது. நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் 2022 யூலை 13 முதல் 16 வரை மெய்நிகராக நடைபெற்ற ECOSOC 2022 அமர்வின் பொது விவாதத்தில் வெளிநாட்டு அமைச்சரும், ECOSOC 2022 அமர்வின் உயர்மட்டப் பிரிவில் வெளிநாட்டு அமைச்சின் செயலாளரும் பங்கேற்பதற்கு இந்த பிரிவு உதவியிருந்தது. 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதில் நிலைபேறான அபிவிருத்தி சபை (SDC) மற்றும் ஏனைய இலங்கை அரசாங்கத்தின் முகவர்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான பணிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கியிருந்தது. வழிநடத்தல் குழு உறுப்பினராக இருந்து, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்பு கட்டுக்கோப்பின் (UNSDCF) 2023-2027 அபிவிருத்தி தொடர்பான பணிகளுக்கு இப்பிரிவு பங்களிப்புச் செய்திருந்தது. 2022 ஒக்டோபர் மாதத்தில் ருவாண்டாவின்

கிகாலியில் நடைபெற்ற பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றிய (IPU) கூட்டம் தொடர்பான பணிகளை ஒருங்கிணைத்திருந்தது.

போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் தாபனம் (UNODC): மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல், ஊழலை நிவர்த்தி செய்தல் மற்றும் ஆகிய துறைகளில் கூட்டங்கள் மற்றும் பயிற்சிகளில் இந்த பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கையின் பங்கேற்புடன் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் தாபனத்துடனான இலங்கையின் ஈடுபாடு 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. இது தொடர்பாக, இப்பிரிவு, தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு (யூர்வுகு), தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு வாரியம் (NDDCB) மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு (CIABOC) உள்ளடங்கலான வரிசை முகவர்களுடன் செயற்படுகின்றது. 2022 டிசெம்பர் 13 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய மனித கடத்தல் எதிர்ப்பு பணிக்குழு (NAHTTF), அக்கறதாரதாரர் கலந்துரையாடல் 2022" பிலிப்பைன்ஸ், மாலத்தீவு மற்றும் மலேசியாவிலிருந்து ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் நிபுணர்களின் பங்கேற்பினை இப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. சர்வதேச மனித உரிமைகள் கடமைகள் மற்றும் கடப்பாடுகளின் பார்வையிலிருந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சமர்ப்பிப்புகளுடன் PTA க்கு பதிலாக விரிவான பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குழுவின் உறுப்பினராக இப்பிரிவு பங்களித்திருந்தது.

போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பு (UNODC): மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல், ஊழலை நிவர்த்தி செய்தல் ஆகிய துறைகளில் கூட்டங்கள் மற்றும் பயிற்சிகளில் இந்த பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கையின் பங்கேற்புடன் ருழேனுஊ உடனான இலங்கையின் ஈடுபாடு 2022 ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. சைபர். இது சம்பந்தமாக, தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு (NAHTF), தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு வாரியம் (NDDCB) மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் (ஊஐயுடீழுஊ) உள்ளடங்கலான வரிசை முகவர்களுடன் இந்த பிரிவு செயற்படுகின்றது. 2022 டிசெம்பர் 13 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய மனித கடத்தல் எதிர்ப்பு பணிக்குழு (NAHTTF) - பங்குதாரர் உரையாடல் 2022" இல் பிலிப்பைன்ஸ், மாலத்தீவு மற்றும் மலேசியாவிலிருந்து ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் நிபுணர்களின் பங்கேற்பு பிரிவு உறுப்பினராக பங்களித்திருந்தது. சர்வதேச மனித உரிமைகள் அர்ப்பணிப்புகள் மற்றும் கடமைகளின் பார்வை பற்றிய வெளிவிவகார அமைச்சின் சமர்ப்பிப்புகளுடன் PTA க்கு பதிலாக விரிவான பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அபேட்சகங்கள் : நியூயோர்க்கிலுள்ள ஐ.நா சபையில் இடம்பெற்ற CEDAW மாநாட்டிற்கான அரச கட்சிகளின் 22 ஆவது கூட்டத்தின் போது நடத்தப்பட்ட 2023-2026 காலப்பகுதிக்கான பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான தேர்தலில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய நாடுகள் குழுவிற்கு பேராசிரியர் ரங்கிதா டி சில்வா டி அல்விஸ் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளில் பல்வேறு பதவிகளுக்கு பிற நாடுகளால் முன்மொழியப்பட்ட வேட்புமனுக்களை ஆதரிப்பதன் மூலம் ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளுடன் நட்புறவைப் பேணுவதற்கான இலங்கையின் முயற்சிகளை இந்தப் பிரிவு தொடர்ந்து ஒருங்கிணைத்தது. இதன்படி, 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி இப்பிரிவு சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU), சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO), தரநிலைப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு (ISO), இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN), அணுசக்தி முகாமை (IAEA), இனப் பாகுபாடு ஒழிப்புக் குழு (CERD), அனைத்து புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு (CMW), ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவை (ECOSOC), ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை, சர்வதேச தொழில் தாபனம் (ILO), கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பு (CED), சர்வதேச மொபைல் செயற்கைக்கோள் தாபனம் (IMSO). ஐக்கிய நாடுகளின் சர்வதேச வர்த்தக சட்ட ஆணைக்குழு (UNCITRAL) மற்றும் பெண்களின் நிலை குறித்த ஆணைக்குழு (CSW) ஆகியவற்றில் நடத்தப்பட்ட 22 தேர்தல்களை செயற்படுத்தியிருந்தது.

2.5 செயலாற்றுகை கண்ணோட்டம்: பிராந்திய பிரிவுகள்

2.5.1 ஆபிரிக்கா விவகாரங்கள் பிரிவு

எகிப்து, எத்தியோப்பியா, கென்யா, சீசெல்ஸ் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் அமைந்துள்ள 5 வதிவிட இலங்கை தூதரகங்கள் ஊடாக ஆபிரிக்க ஒன்றியத்துடன் தொடர்புற்ற விடயங்களை கையாள்வதற்கு மேலதிகமாக பிராந்தியத்திலுள்ள 54 நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை ஒருங்கிணைப்பதற்கான கடமைகளும் தொழிற்பாடுகளும் ஆபிரிக்க விவகாரங்கள் பிரிவுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்க சனாதிபதியின் விஜயம்: தென்னாபிரிக்க சனாதிபதிக்கும் இலங்கை சனாதிபதி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோர்களுக்கிடையிலான கூட்டங்களுக்கு வசதியளித்திருத்தல். (நவம்பர் 2022).

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கும் ஏனைய உயர் மட்ட அலுவலர்களுக்கும் இடையிலான கூட்டங்கள்: தூதரக தலைவர்கள்/ஆபிரிக்க தூதரகங்களின் பிரதிநிதிகளுக்கும் ஆபிரிக்க விவகாரங்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையிலான கூட்டங்களுக்கு மேலதிகமாக ஆபிரிக்க நாடுகளின் (தென்னாபிரிக்கா, எகிப்து, லிபியா) தூதரக தலைவர்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரையும் வெளிநாட்டு அலுவல்கள் செயலாளரையும் சுமுகமாக சந்திப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இருதரப்பு உறவுகள்: தென்னாபிரிக்கா வெளிநாட்டு அமைச்சுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்குடமை அரங்கின் 8 ஆவது அமர்வு மெய்நிகராக இடம்பெற்றது(பெப்ரவரி 2022). இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான 3ஆவது கூட்டு பொருளாதார ஆணைக்குழுவை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன (முதலாவது காலாண்டு 2023). இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளின் 65 ஆண்டுகளை கொண்டாடும் முகமாக முத்திரை வெளியிடுதல் ஒருங்கிணைக்கப்படமை. (முதலாவது காலாண்டு 2023).

பலதரப்பு உறவுகள்: CHOGOM, , UNGA, UNEP மற்றும் COP 27 உச்சிமாநாடுகள் பொருட்டு வசதியளிக்கப்பட்டமை மற்றும் நிலையான உள்ளீடுகள் வழங்கப்பட்டமை.
பொருளாதார இராஜதந்திரம்: இலங்கை வியாபார தூதுக்குழுவுக்கும் உகண்டா அதிகாரிகளுக்கும் இடையிலான B2B கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் ஆபிரிக்க கண்டத்தில் புதிய சந்தை வாய்ப்புகளை தேடிப்பார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் இராஜதந்திர உறவுகளை ஆபிரிக்க கண்டத்தில் விஸ்தரித்தல்: கமரூன் நாட்டுடன் ராஜதந்திர உறவுகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'கமோரோஸ் மற்றும் டோமே பிரின்சிபே நாடுகளுடனான முறையான ராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறும் நிலையிலுள்ளது. புரூண்டி நாட்டுடனான இராஜதந்திர உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.5.2 அமெரிக்கா பிரிவு

அமெரிக்க பிராந்தியத்துடனான இலங்கையின் இருபக்க உறவுகள் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தூதரகங்கள்/ பதவிகள் (வொஷிங்டன் டி.சீ, நியூயோர்க் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ்), கனடா (ஒட்டாவா மற்றும் டொரன்டோ) ஊடாகவும், அமைச்சிலுள்ள அமெரிக்க பிரிவின் வழிகாட்டல் மற்றும் பணிப்பின் கீழ் பிறேசில் மற்றும் கியுபா ஊடாகவும் வழிகண்டறியப்படுகின்றன. 2022 ஆம் அண்டில் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள்/ பதவிகளுடன் கூட்டிணைப்பில் அமைச்சானது, இருதரப்பு, பலதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் உயர் பதவியாளர்களுடன் சனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், வெளிநாட்டு செயலாளர் ஆகியோர் பொருட்டான கூட்டங்கள் அடங்கலாக அரசியல்வாதிகள் மற்றும் உத்தியோகபூர்வ உரையாடல்களில் பங்குகொள்பவர்களுடனான உயர்மட்ட இடைத்தொடர்பு ஒருங்கிணைக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டது. பொருளாதார ராஜதந்திரத்தை பொறுத்தமட்டில், உரிய சந்தைகளில் இலங்கை பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மேம்படுத்துவதற்கு உரிய தூதரகங்கள்/பதவிகள் ஒழுங்குசெய்தன/வசதியளித்தன் அந்நாடுகளிலுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான வியாபார தொடர்புகளை உருவாக்குதல் அத்துடன் நாட்டின் பொருளாதார மீளெழுச்சியை மேம்படுத்துவதில் சருவதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற ஏற்புடைய அலுவலர்களுடன் இடைத்தொடர்புகளை நடத்தியிருந்தன. இராணுவ உபகரணங்கள், பயிற்சி வாய்ப்புக்கள் போன்றனவற்றை பெறுதலை உறுதிப்படுத்தல் அடங்கலாக பாதுகாப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கு அரசாங்க அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை தூதரகங்கள்/ பதவிகள் தொடர்ந்து நடாத்தியிருந்தன. பொருளாதார அபிவிருத்தியை எய்துவதில் அரச முயற்சிகளுக்கான உதவியை பெறுகின்ற அதேவேளை உரிய நாடுகளில் ஓ.எஸ்.எல்.க்கு காவற்தூது ஒத்துழைப்பை தூதரகங்கள் வழங்கியிருந்தன.

அமெரிக்க பிரிவு மற்றும் உரிய தூதரகங்கள்/பதவிகள் என்பன உரிய நாடுகளுடனான இருதரப்பு உறவுகளின் பல்விதமான அம்சங்களை கலந்துரையாடுவதற்கான 'கொள்கை கலந்துரையாடல;' பொறிமுறையை ஏற்கனவே தாபிப்பதன் உடாக மாறாத கொள்கை கலந்துரையாடலை தொடர்ந்தும் பேணும் என்பதுடன் அத்தகைய பொறிமுறை இல்லாத நாடுகளில் 'கொள்கை உரையாடல்' ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை.

2.5.3 கிழக்காசியா பிரிவு

மீளாய்வு காலப்பகுதியின்போது கிழக்காசிய பிரிவானது, அவுஸ்ரேலியா, சீனா, ஜப்பான், கொரிய குடியரசு வதிவிட தூதரகங்கள் மற்றும் அவற்றின் உடனிகழ்வான சான்றளிப்புகள் ஊடாக உரிய நாடுகளில் வாழும் இலங்கையர்களுக்ககு கொன்சுலர் உதவியையும் தொழில் நலனோம்பலையும் வழங்கும் அதேவேளை பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் அரசியல், பொருளாதார, சமூக கலாசார மற்றும் மக்களுக்கான மக்கள் உதவிகளை மேலும் பலப்படுத்துவதற்கு தொடர்ந்து செயலாற்றியிருந்தது.

சீனா: பெற்றோலிய பொருட்களை இறக்குமதின் பொருட்டு அமெரிக்க டொலர் 1 பில். இருபக்க நிதியுதவி, அமெரிக்க டொலர் 1.5 பில். SWAP உடன்படிக்கை, அமெரிக்க டொலர் 1.5 பில். வாங்குநர் கடன் வசதி மற்றும் அமெரிக்க டொலர் 500மில். கோரிக்கை என்பன ஒழுங்குசெய்யப்பட்டன. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி சிறிய நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் கோவிட் , 19 மீள்வதற்காக அமெரிக்க டொலர் 180 மில். கடனை அங்கீகரித்தது. சீனா அவசர மனிதாபிமான உதவியாக 500 மில். RMB (அமெரிக்க டொலர் 74 மில்.) இலங்கைக்கு வழங்க உடன்பட்டது. அத்துடன், சீனாவின் உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமாகிய வாங் A+ 2022 சனவரி 8-9 ஆம் திகதிகளில் விஜயத்துக்கு வசதியளித்தது. சீனாவில் உணவு உள்ளீடாக இலங்கை கறுவாயை பதிவுசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புடவை, இரத்தினக்கல் மற்றும் ஆபரண துறைகளிலுள்ள முதன்மையான சீன கம்பனிகளுடனான B2B ஒழுங்குசெய்துள்ளது. மாகாண அரசாங்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட வர்த்தக, போக்குவரத்து சந்தைகளில் பங்குபற்றியது. மீள்புதுப்பிக்கத்தகு வலு, உயர் கல்வி, வறுமை ஒழிப்பு, மீள்காடாக்கம் மற்றும் நீல பொருளாதார அபிவிருத்தி பொருட்டு தென்-தென் ஒத்துழைப்பின் கீழ் உதவியைப் பெறுவதற்காக சீனா சருவதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மை (CIDCA), ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் சீனாவிலுன்ன ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

யப்பான்: முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற ஷின்ஸோ அபேவின் அரச இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக 2022 செப்ரெம்பர் 26-28 வரை சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் உத்தியோகபூர்வ யப்பான் விஜயத்துக்கு வசதியளித்தமை. சனாதிபதி பிரதமர் பியுமியோ கிஷீடா அவர்களுடன் உச்சிமாநாட்டு கூட்டத்தில் கலந்துகொண்டதுடன் யப்பான் வெளிநாட்டு அமைச்சர் யோஷிமாஷா ஹயாஷி சுமுகமான சந்திப்பை மேற்கொண்டார். தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார 2022 செப்ரெம்பர் 26 முதல் ஒக்டோபர் 4 வரை யப்பானுக்கு விஜயம் செய்து யப்பான் நீதி ராஜாங்க அமைச்சர் மற்றும் சுகாதார, தொழில் மற்றும் நலன்புரி இராஜாங்க அமைச்சர் சந்தித்தல் தொடர்பான உத்தியோகபூர்வ விஜயத்துக்கு வசதியளிக்கப்பட்டது. இலங்கையர்களுக்கான தொழில் வகுதிகளை அதிகரிப்பதற்கு கலந்துரையாடப்பட்டது. 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மனிதாபிமான அவசர உதவியை யப்பான் நிறுவனம் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவுகளை வாங்குவதற்கு ஒருங்கிணைத்தது. யப்பானின் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு ஆசிய விவகாரங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் கானோ டேகிரோவின் விஜயத்துக்கு வசதியளிக்கப்பட்டது. 2022 யூலை 15 ஆம் திகதியன்று நடைபெற்ற யப்பான்-இலங்கை மூன்றாவது கொள்கை கலந்துரையாடல் கூட்டத்துக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கொரிய குடியரசு (RoK): முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் 2022 சனவரி 5-7 வரை கொரிய குடியரசிற்கான உத்தியோகபூர்வ விஜயத்துக்கு வசதியளிக்கப்பட்டது. அங்கு அவர் பிரதம மந்திரி கிம் பூ-கியூமை சந்தித்தார். அத்துடன், கொரிய குடியரசின் தேசிய பேரவையின் சபாநாயகரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2022 சனவரி 19 முதல் 22 வரை இடம்பெற்றது. கொரியா குடியரசின் மனித புவி நலன்புரி இலாப நோக்கற்ற அமைப்பு மற்றும் கொரியா-இலங்கை மகா விகாரை ஆகியவற்றால் 42 மில்லியன் இலங்கைரூபாய் மதிப்புள்ள 26 அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் அன்பளிப்பு ஒருங்கிணைக்கப்பட்டது. மேலும் இப்பிரிவானது, EPS புலம்பெயர் வேலையாட்களின் தற்போதைய மீள் அனுமதிஎல்லையை அதிகரிப்பதற்கும் இலங்கைக்கான தற்போதைய நூளு அனுமதிப்பங்கினை தரமுயர்த்துவதற்கு உரிய தென் கொரிய அதிகாரிகளுடன் தொடர்ந்து ஈடுபட்டிருந்தது.

அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலியா, விக்டோரியா மாநிலம், சுகாதாரத் திணைக்களத்தினால் இலங்கைக்கு சுமார் 66.9 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியவசிய மருந்துகளை நன்கொடையாக வழங்குதல் ஒருங்கிணைக்கப் பட்டிருந்ததுடன், அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை தூதரகங்கள்/பதவிகள் என்பன, காவற்தூது மற்றும் நலன்புரி சேவைகள் ஊடாக இலங்கைப் பிரசைகளுக்கு உதவும் அதேவேளை இலங்கையின் வர்த்தகம், ஏற்றுமதி, முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து செயலாற்றியிருந்தது. அவுஸ்திரேலியா, விக்டோரியா மாநிலம், சுகாதாரத் திணைக்களத்தினால் இலங்கைக்கு சுமார் 66.9 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை நன்கொடையாக வழங்குதல் ஒருங்கிணைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP) ஊடாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அவுஸ்திரேலிய டொலர் 50 மில்லியன் உதவி, அத்துடன் அவசர உணவு மற்றும் சுகாதாரநலன் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான மேலதிக அவுஸ்திரேலிய டொலர் 25 மில்லியன் ஆதரவு என்பன ஒருங்கிணைக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட அமைப்பாக மீள்பட்டியல் படுத்துவதற்கான வெற்றிகரமாக ஆதரவு தேடப்பட்டு 2022 செப்ரெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து செயல்வலும்பெறும் வகையில் எதிர் பயங்கரவாத நிதியிடல் தடைகளின் கீழ் மேலும் 3 ஆண்டுகளுக்கு தடைசெய்யப்பட்டது.

நியூசிலாந்து : நியூசிலாந்தின் இடம்பெயர்வு கொள்கை அபிவிருத்திக்கான சர்வதேச நிலையத்துக்கும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய

நாடுகளின் கையேடு 2022-23 இன் நியூசிலாந்து தயாரிப்பு மற்றும் ஐ.நா விழுமியங்கள் மற்றும் அமைப்பின் கோட்பாடுகள் என்பன அனுப்பப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவம் என்ற வகையில், தகவல் பற்றி இற்றைவரைப்படுத்துவதற்கு இந்த கையேடு இலங்கைக்கு மிகவும் மதிப்புமிக்கது என்பதுடன், இந்த சிறந்த படைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் மிகவும் சுவாரஷ்யமானதும் பயனுள்ளதுமாகும்.

மேலும், இந்த பிரிவானது, பெய்ஜிங், ஷாங்காய், குவாங்சோ, சியோல், டோக்கியோ, கான்பெரா, சிட்னி மற்றும் மெல்பர்ன் ஆகிய இடங்களில் உள்ள இலங்கை தூதரகங்கள்/பதவிகளுடன் இணைந்து, கிழக்கு ஆசியாவின் பிராந்தியங்களிலுள்ள உடனிகழ்வான சான்றளிக்கப்பட்ட நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் பல முற்போக்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது.

2.5.4 ஐரோப்பா, மத்திய ஆசியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய பிரிவு

இருதரப்பு உறவுகள்: கூட்டு ஆணைக்குழுக்கள்/அரசியல் ஆலோசனைகள் மற்றும் கூட்டுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்- இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு அரசியல் ஆலோசனைகள்-1வது சுற்று மேலதிக செயலாளர் மட்டத்தில் 2022 இல் நடைபெற்றது. வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புடன், வணிகம் பற்றிய இலங்கை - ரஷ்யா அரசாங்களுக்கிடையிலான ஆணைக் குழுவின் 3 ஆவது சுற்றினை கொழும்பில் நடத்துவதற்கான வேலை நடைபெற்று வருகின்றது. இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான இருதரப்பு அரசியல் ஆலோசனைகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல்களின் ஆரம்பம். போர்த்துக்கல், ஹங்கேரி, ஜோர்ஜியா, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு (பெலரூஸ், கசகஸ்தான் மற்றும் யெகாடெரின்பர்க்) ஆகிய நாடுகளில் இலங்கையின் கௌரவ தூதுவர்களை நியமிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. குர்ஸ்க் (ரஷ்ய கூட்டமைப்பு), ஆர்மேனியாவில் உள்ள இலங்கை கௌரவ காவற்தூதர்கள் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிப் நகரில் உள்ள இலங்கையின் கௌரவ தூதுவர் நியமனத்தை புதுப்பிப்பதற்கு வசதியளிக்கப்பட்டது. 2022 டிசம்பர் 01ஆம் திகதியன்று ஒஸ்திரியாவின் டிரோலில் இலங்கையின் கௌரவ துணைத் தூதரகம் திறப்பதற்கு வசதியளிக்கப்பட்டது. இலங்கைக்கும் - ரஷ்யாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் உருவாக்கப்பட்டதன் 65 ஆவது ஆண்டு நிறைவு உயர் மட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் கொண்டாடப்பட்டது.

உயர்மட்ட, உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய விஜயங்கள் மற்றும் அழைப்புகளுக்கு ஏற்பாடுசெய்தல்: கணிசமான செய்திச் சுருக்கங்கள் / உள்ளீடுகள் மற்றும் ஆதரவளிப்பு ஒழுங்குகளை ஏற்பாடு செய்வதனூ டாக வெளிப்புற / உள்நோக்கிய விஜயங்களுக்கு ஏற்பாடுசெய்ப்பட்டிருந்தது.

உள்நோக்கிய விஜயங்கள்: 2022 சனவரியில் துருக்கிய வெளிவிவகார அமைச்சர் மெவ்லுட் கவுசோக்லு அவர்களின் இலங்கைக்கான விஜயம். வெளிவிவகார மற்றும் வணிகம் அமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தில் (குஊனுழு) ஹங்கேரியின் பீட்டர் சிஜ்ஜார்டோ அவர்களின் 2022 சனவரி 12 ஆம் திகதியன்று இலங்கைக்கான விஜயம். தெற்காசிய இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் 2022 சனவரி 18-20 வரை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.இங்கிலாந்து பிரபுக்கள் சபையின் உறுப்பினரான அதிகௌரவ லோர்ட் நேஸ்பை அவர்களின் இலங்கைக்கான விஜயம் 2022 மார்ச் 26 முதல் ஏப்ரல் 3 வரை இடம்பெற்றது. பிரெஞ்சு மூதவையிலுள்ள "பிரான்ஸ் - இலங்கை பாராளுமன்ற நட்புக் குழுவின்" உயர்மட்ட விஜயம் 2022 மார்ச் 22-27 வரை இடம்பெற்றது. 2022 நவம்பர் 9 - 11 வரை இலங்கைக்கான இங்கிலாந்து பிரதமரின் வர்த்தகத் தூதுவர் பிரபு டேவிஸ் ஒப் அபர்சோக் அவர்களின் இலங்கைக்கான விஜயம்.

வெளிநோக்கிய விஜயங்கள்: வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் (பேராசிரியர்) ஜி.எல். பீரிஸ் அவர்கள் 2022 பெப்ரவரி 24 ஆம் திகதியன்று, இந்து-பசிபிக், பாரிஸில் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் அரங்கில் கலந்துகொள்வதற்காக விஜயம் செய்து நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பை நடத்தியிருந்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் (பேராசிரியர்) ஜி.எல். பீரிஸ், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC), 49 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக ஜெனீவாவிற்கு 2022 விஜயம் மார்ச் மாதத்தில் விஜயம் செய்து அங்கு தெற்காசியா அமைச்சர், ஐநா மற்றும் பொதுநலவாய FCDO பிரபு அஹமட் ஆகியோர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தியிருந்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் (பேராசிரியர்) ஜி.எல். பீரிஸ் அவர்கள் 2022 மார்ச் 26, 27 ஆகிய திகதிகளில் டோஹா அரங்கில் கலந்துகொள்வதற்காக விஜயம் மேற்கொண்டு துருக்கியே வெளிவிவகார அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார். 2022 யூன் 10 முதல் 12 வரை சிங்கப்பூரில் நடைபெற்ற ஐஐஎஸ்எஸ் ஷங்ரிலா உரையாடலில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் (பேராசிரியர்) ஜி.எல்.பீரிஸின் விஜயம் அங்கு உக்ரேன் பிரதி வெளியுறவு அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பு இடம்பெற்றது. யூன் 12-17 வரை ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 50 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜயம் மேற்கொண்டார். இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளில்

கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் பிரித்தானியாவிற்கு வருகைதந்தார். 2022 செப்தெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 77வது அமர்வில் கலந்து கொள்வதற்காக வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி விஜயம் மேற்கொண்டு உஸ்பெகிஸ்தான், ஆர்மேனியா வெளியுறவு அமைச்சர்களுடனும் இங்கிலாந்து வெளியுறவு அமைச்சருடனும் இருதரப்பு சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார். சான்றுப்பத்திரங்களை சமர்ப்பிப்பதற்காக, லிதுவேனியா (2022 ஏப்ரல் 6), நோர்வே மற்றும் பின்லாந்து (2022 செப்ரெம்பர் 26-29) ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவரின் (ஸ்வீடனில் வசிப்பவர்) விஜயம். 2022 ஒக்டோபர் 12-13 வரை கசகஸ்தானின் நூர்-சுல்தானில் நடைபெற்ற இடைத்தொடர்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் மாநாட்டின் (UNHRC) 6 ஆவது உச்சி மாநாட்டிற்கு வசதியளிக்கப்பட்டது. 2022 ஒக்டோபர் 9-16 வரை இலங்கை சனாதிபதியின் விசேட பிரதிநிதியாக கல்வி அமைச்சரின் ரஷ்ய கூட்டமைப்பிற்கான விஜயத்திற்கு ஏற்பாடுசெய்யப்பட்டது. சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ 2022 நவம்பர் 7 ஆம் திகதி உலகப் பயண மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஐக்கிய இராச்சியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கொழும்பு மாநகர சபையின் மேயர் றோசி சேனநாயக்க அவர்களின் 2022 நவம்பர் 10 , 22 வரை இத்தாலிக்கான விஜயம். வெளிநாட்டுப் பயணம் 6-9 டிசம்பர் 2022, ஒஸ்திரியா, வியன்னா, 2022 டிசெம்பர் 6-9 வரை CTBTO 3 ஆவது அறிவியல் இராஜதந்திர கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார செயலாளர் ஒஸ்திரியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

தொலைபேசி அழைப்புகள் மற்றும் வீடியோ அழைப்புகளுக்கு வசதியளித்தல்: 2022 மே 5 ஆம் திகதியன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜொன்சன் இடையிலான அழைப்பு. சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தெற்காசிய அமைச்சர், ஐ.நா மற்றும் பொதுநலவாய ஐக்கிய இராச்சிய FCDO பிரபு அஹமத் இடையிலான 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய அழைப்பு. சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தெற்காசிய அமைச்சர், ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய ஐக்கிய இராச்சிய FCDO இடையிலான 2022 யூலை 23 ஆம் திகதிய அழைப்பு.

முக்கியமான இருதரப்பு உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள் / நிகழ்ச்சித்திட்டங்களை வசதியளித்தல் மற்றும் பின் ஆய்வு நடத்துதல்: சுகாதாரநலன் ஒத்துழைப்பில் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை 2022 சனவரி 18 ஆம் திகதி கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு செய்செய்திருந்தது. கைச்சாத்திடுவதற்கான ஒழுங்குகளை செய்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதன் ஊடாக இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிக்கான உடன்படிக்கைக்கு வசதியளித்தல். 2022-2024 ஆம் ஆண்டிற்கான ஸ்டைபென்டியம் ஹங்கேரிகம் நிகழ்ச்சித்திட்டத்தின் உருவரைசட்டகத்திற்குள் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு வசதியளித்தல். இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான வான் சேவை உடன்படிக்கைக்கான கலந்துரையாடல் பூர்த்திசெய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் 2022 மார்ச் 21 ஆம் திகதி பெறப்பட்டது. இளைஞர் கொள்கை துறையில் இளைஞர் விவகாரங்களுக்கான மத்திய முகவராண்மைக்கும் (ரஷ்ய கூட்டமைப்பு) இலங்கையின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2022 யூலை 5 ஆம் திகதி பெறப்பட்டதுடன், வரிசை அமைச்சின் பெயர் மாற்றத்துடன் கையெழுத்திடுவதற்கு தயாராக உள்ளது. பௌதிக கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பு தொடர்பான இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பொருட்டு பேச்சவார்த்தை பூர்த்திசெய்யப்பட்டதுடன், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையில் விவசாயத் துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தயாராக உள்ளது. சுகாதாரத் துறையில் நன்கொடை வழங்குவது தொடர்பிலான துர்க்கியே அரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையில் கல்வித் துறையில் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவுள்ளது. இலங்கையின் கல்வி அமைச்சுக்கும் துருக்கிய உயர்கல்வி பேரவைக்கும் இடையில் உயர்கல்வி துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இலங்கையின் பாராளுமன்ற ஓம்புட்ஸ்மன் அலுவலகத்திற்கும், துருக்கி ஓம்புட்ஸ்மன் நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பாடுசெய்யப்பட்டன.

பாரிஸில் ஒவ்வொரு மாநிலத்தின் உத்தியோகபூர்வ தூதரகங்களின் முகவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பொருட்டு சம்பளத்துடன் வேலையில் ஈடுபடுவதற்கான அங்கீகாரம் தொடர்பான இலங்கைக்கும் பிரான்ஸ் அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்படிக்கையில் 2022 பெப்ரவரி 23 ஆம் திகதியன்று கைச்சாத்திட்டிருந்த துடன், இலங்கை மற்றும் 6,000 இறப்பர் சிறு உடமையாளர்களுக்கான இயலளவினை கட்டியெழுப்பும் செயற்றிட்டம் (நதி செயற்றிட்டம்) தொடர்பில் இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு பிரான்சில் உள்ள KSAPA நிறுவனத்துக்கம் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை. இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கும் லக்சம்பேர்க் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் இடையில் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டது. இலங்கைக்கும் மோல்டாவுக்கும்

இடையிலான தொழிலாளர் ஒத்துழைப்பு தொடர்பான உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கை மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் இடம்பெயர்வு மற்றும் நடமாடும் கூட்டாண்மை தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் சாரதி அனுமதிப்பத்திர பரஸ்பர அங்கீகாரத்துக்கான இருதரப்பு உடன்படிக்கை ஆகியவை ஏற்பாடுசெய்யப்பட்டன.

பலதரப்பு உறவுகள்: பொதுநலவாயம் - 2022 யூன் 23 முதல் 25 வரை ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற பொதுநலவாய அரசாங்கத் தலைவர்கள் மாநாட்டிற்கு (CHOGM) வெளியுறவு அமைச்சர் (பேராசிரியர்) ஜி. எல். பீரிஸின் விஜயத்துக்கு வசதியளிக்கப்பட்டது. இந்த விஜயத்தின் போது, டொமினிகா, நியூசிலாந்து, சீஷெல்ஸ், பங்களாதேஷ், கென்யா, மொரிஷியஸ், இந்தியா, மலேசியா, சைப்ரஸ் மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு சந்திப்புகள் இடம்பெற்றன. 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற பொதுநலவாய கல்வி அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 2022 மே 17 முதல் 19 வரை பொதுநலவாய சுகாதார அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 2022 யூலை 28 முதல் ஓகஸ்ட் 8 வரை இங்கிலாந்தின் பர்மிங்காமில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 2022 யூலை 27 ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு அமைச்சர்கள் கூட்டம் ஆகியவற்றுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. பொதுநலவாய மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டம், பொதுநலவாய நிதி அமைச்சர்கள் கூட்டம், வாஷிங்டன் டி.சி மற்றும் மொரிஷியஸில் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பொதுநலவாய சட்ட அமைச்சர்கள் கூட்டம் ஆகியவற்றுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. இலங்கையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான (TVET) பராமரிப்பு வழங்குபவர்களின் (முதியோர்) பாடநெறியின் வீடியோ உள்ளடக்க விருத்தி தொடர்பில் ஆசியா பொருட்டான பொதுநலவாய கல்விசார் ஊடக நிலையத்துடன் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் - 2022 பெப்ரவரி 8 ஆம் திகதி புரூஸ்சல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை (Ix-,) கூட்டு ஆணைக்குழுவின் 24 ஆவது அமர்வுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்துடன், 2023 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வைக் ஒன்றுகூட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2022 பெப்ரவரி 2 ஆம் திகதி அபிவிருத்தி ஒத்துழைப்பில்ராப்பிய ஒன்றியம்-இலங்கை செயற்குழுவுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததுடன். 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற உரிய பிரச்சினைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னேற்றங்களை எடுத்திருந்த, ஆளுகை, சட்டவாட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயற்குழுவின் 6 ஆவது கூட்டத்தை நடத்துவது தொடர்பான விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், 2022 நவம்பர் 17 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் மற்றும் தெற்காசிய பிரதிநிதிகள் குழுவின் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் நிகழ்நிலை சந்திப்பை ஒருங்கிணைத்திருந்தது. இலங்கை நண்பர்கள் குழு 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் பல்வேறு அரசியல் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 உறுப்பினர்களின் பங்கேற்புடன் ரூஸ்சல்ஸில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

பொருளாதார இராஜதந்திரம்: சுகாதாரநலன் ஒத்துழைப்பில் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டு (2022 சனவரி 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.) இது இலங்கையில் இருந்து சுகாதாரநலன் வாண்மையாளர்களை நிலையான மற்றும் நெறிமுறையான ஆட்சேர்ப்புக்கு அனுமதிக்கும். சுகாதாரநலன் ஒத்துழைப்பு தொடர்பான இலங்கை-இங்கிலாந்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்ட கூட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. ஏரோ/ப்ளோட் மூலம் நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்குவது தொடர்பான விவகாரம் தொடர்புடைய வரிசை அமைச்சுக்களிடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இது சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் பங்களிக்கும். வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள்/பதவிகளின் மூலம் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்துவதற்கு வசதியளிக்கப்பட்டது. ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக இலங்கை மக்கள் வங்கிக்கும் மொஸ்கோவில் உள்ள நட்சின்ஸ்பிரம் (யேவளஎௌவிசழஅ) வங்கிக்கும் இடையில் ஒரு ஒத்துழைப்பு உருவாக்கப்பட்டது.இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இங்கிலாந்தில் அங்கீகரிப்பதற்காக, இலங்கைக்கான நியமிக்கப்பட்ட அந்தஸ்தைப் பெறுவதற்காக லண்டனில் உள்ள தூதரகத்தால் தொடங்கப்பட்ட நடவடிக்கைக்கு வசதியளித்தல். சுமார் 10 மில்லியன் யூரோ மதிப்புள்ள நோர்வே கப்பலான 'மிஸ்ஜே விட்டா' 'ஆளைதந ஏவைய' வை கொழும்பு டொக்யார்ட் பிஎல்சிக்கு வழங்குவதற்கு வசதி செய்யப்பட்டது. ஹங்கேரியில் இருந்து சலுகை நிதியுதவியுடன் நெடுஞ்சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. வோர்சோவில் (2022 டிசம்பர் 5) 15 ஆவது சர்வதேச தொண்டு பசார் -2022 இற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை தூதரகங்கள் மற்றும் தனியார் துறைகள் ஊடாக தொடர் வெபினார்களுடன் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வுகளுக்கு வசதியளிக்கப்பட்டது. சுவிட்சர்லாந்து அரசாங்கத்திடமிருந்து இலங்கை மக்களுக்கு புதுப்பிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகளை நன்கொடையாக வழங்குவதற்கு வசதியளிக்கப்பட்டது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் (SLTPB) ஒத்துழைப்புடன் 2022 ஒக்டோபர் 9-19 வரை சுற்றுச்சூழலை

சொகுசு பயணத்தை ஊக்குவிக்கும் 9 போலந்து பயண முகவர்களுக்கான இலங்கை முடிவிடம் அறிமுகம் சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்தது. 57 இலங்கை பயண மற்றும் விருந்தோம்பல் நிறுவனங்களின் பங்கேற்புடன், உலகப் பயணச் சந்தை 2022 இல் நவம்பரில் பங்கேற்றது. ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள், ஊடகங்கள் மற்றும் பெல்ஜியத்தில் கறுவாப்பட்டை இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களின் பங்கேற்புடன் 2022 ஒக்டோபர் 18 அன்று பெல்ஜியத்தில் சிலோன் கறுவாப்பட்டைக்கு நுரு PGI அந்தஸ்து வழங்குவது பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. 2023 ஜனவரியில் இலங்கையில் முடிவிடம் கிளாசிக்-ஸ்ரீலங்கா 2023 கார் பேரணியை நடத்துவது தொடர்பாக பெல்ஜியத்தில் டெஸ்டினேஷன் கார் பேரணி அமைப்பாளர்களின் ஒழுங்குசெய்பவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு உதவிசெய்யப்பட்டது. 'Global Questions', 'HardTalk' and 'Newsnight' நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கையில் படமாக்க பிபிசியின் ஊடகக் குழு இலங்கைக்கு வருவதற்கு உதவியது. இலங்கையில் SVT ஆல் தயாரிக்கப்பட்ட பிரைம் டைம் அம்ச வர்ணனைப் படம் பொருட்டு புவியியல் நிபுணரின் விஜயத்துக்கு உதவியது. நெதர்லாந்தில் விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் சாத்தியமான குனுஜ வாய்ப்புகளுக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டது. நெதர்லாந்தில் BPO செயல்படுத்தும் சேவைகள் மற்றும் IT/IT என்பன ஆரம்பிக்கப்பட்டன. துருக்கிய ஆட்சேர்ப்பு நிறுவனத்திடமிருந்து (AST Global) பெற்ற ஐந்து (5) வேலை கட்டளைகளைப் பதிவுசெய்வதன் மூலம் 3,220 இற்கும் மேற்பட்ட பணியாளர்களை (ஸ்பா தெரபிஸ்ட்கள்-10, நகை தயாரிப்பாளர்கள்-10, கனரக டிரக் சாரதிகள் - 650, மற்றும் ஹோட்டல் தொழிலாளர்கள் - 2,550) ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 2022 செப்ரெம்பர் 1-4 வரை இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலக உணவுச் சந்தையில் பங்கேற்றதுடன் B2B கூட்டங்களுக்கான சந்தையில் இரண்டு (2) இலங்கை கம்பனிகள் பங்கேற்பதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. மொஸ்கோவில் நடைபெற்ற முக்கிய வர்த்தக கண்காட்சியான Prodexpo -2022 இல் பங்கேற்பதற்காக 40 இலங்கை தொழில்முயற்சியாளர்களை உள்ளடக்கிய வணிகக் குழுவொன்றை ஏற்பாடு செய்துள்ளது. வியாபார வெளியீடு பொருட்டான நிலைபேறான உணவு, தளபாடம் மற்றும் நாரிழை தொடர்பாக ஸ்வீடிஷ் உலகளாவிய சங்கிலி மற்றும் இலங்கை உற்பத்தி கம்பனிகள் ஆகியவற்றுடன் கூட்டு கலந்துரையாடல்களை ஏற்படுத்தியிருந்தது. பேர்லின் நடைபெற்ற 'சருவதேச பசுமை வாரத்தில்' இலங்கை கலந்துகொள்வதற்கு ஏற்பாடுசெய்திருந்துடன், பிராங்பேர்ட் 'Ambiente' அட்டவணை 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு மற்றும் காப்பு ஒத்துழைப்பு: இலங்கை அதிகாரிகள் தற்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய பல வெளிநாட்டு கூட்டங்களில் பங்குகொள்வதற்கு வசதியளிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள இலங்கை விதிவிட தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் ஆகியவற்றினூடாக இலங்கை அதிகாரிகளின் பயிற்சி மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புவதற்கு வசதியளிக்கப்பட்டது. பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவன ஐ.ஒ. பட்டியலின் ஆண்டிற்கு இருதடவை மீளாய்வில் விடுதலை புலிகள் தொடர்பான தடையை நீடிக்கும் நோக்கில் ஐரோப்பா வெளி செயல் சேவை (EEAS) தடைக் கொள்கைப் பிரிவுக்கு தகவல்களை இற்றைப்படுத்தி வழங்கியமை.

புலம்பெயர்ந்த தொழில் நலனோம்பல் / வெளிநாட்டு இலங்கையர்கள் ரூ கொவிட்19 மற்றும் பொருளாதார பிரச்சினை தொடர்பான செயற்பாடுகள்: டியாகோகாசியா (பிரித்தானியா இந்து சமுத்திர ஆள்புலம்), மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா உள்ளிட்ட பிராந்தியங்களில் அலைந்துதிரிந்து கண்டுபிடிக்கப்பட்ட பல இலங்கையர் களை மீளஒப்படைப்பதற்கு எற்பாடுசெய்யப்பட்டிருந்தது. உக்ரேன், துருக்கி மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகளில் இருந்த இலங்கையர்களை மீளஒப்படைப்பதற்கு

கோவிட்-19 தொடர்பான உதவி: பிரான்ஸ், துருக்கியே, ஜேர்மனி மற்றும் சர்பியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து அவசர மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கல் ஒருங்கிணைக்கப்பட்டது.

பொருளாதார பிரச்சினை தொடர்பான உதவி: இலங்கையிலுள்ள உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP),) ஐக்கிய நாடுகள் சருவதேச சிறுவர் அவசர நிதியம் (UNICEF) மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA) ஊடாக நெதர்லாந்து அரசாங்கத்தினால் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி நெதர்லாந்து குரோனர் 13 மில். (சுமார் 490 மில்லியன் இலங்கை ரூபா) இலங்கைக்கு வழங்கப்பட்டது. நாட்டில் உணவு பாதுகாப்பினை விருத்திசெய்யும் நோக்கில் யூலை மாதத்தில் இத்தாலிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு யூரோ 300,000 அளிப்பு வழங்கல் வசதியளிக்கப்பட்டது. நுண் கடன், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பசுமை தொழில்நுட்பம், சுகாதாரமும் துப்புரவேற்பாடும், கலாசாரம், கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் ஊடாக வறுமை ஒழிப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி துறைகளில் இலங்கையிலுள்ள வசதி குறைந்த மக்களுக்கு உதவி வழங்கும் ஒல்லாந்து நற்பணி மன்றங்களுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டது.

உத்தியோகபூர்வ விஜயங்கள் மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள் பொருட்டான வீசாக்களுக்கு வசதியளிக்கப்பட்டது. ஜோர்ஜியா றக்பி ஒன்றியத்துக்கும் இலங்கை றக்பி குழுக்களுக்குமிடையிலான ஒத்துழைப்புக்கு வசதியளிக்கப்பட்டது.

2.5.5 மத்திய கிழக்கு பிரிவு

இருதரப்பு உறவுகள்: 2022 மார்ச் 02 ஆம் திகதியன்று, அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம், எண்ணெய் துறையில் சாத்தியமான ஒத்துழைப்பு பற்றி கலந்துரையாடுவதற்கு இலங்கையின் ஜனாதிபதிக்கும், அப்போதைய அபுதாபியின் பட்டத்து இளவரசர் (தற்போதைய ஜனாதிபதி) மொஹமட் பின் ஸயீட் அல் நஹயன் அவர்களுக்கும் இடையே தொலைபேசி அழைப்பை ஏற்பாடு செய்தது. தோஹாவில் உள்ள இலங்கை தூதரகம் கட்டார் நாட்டின் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கும் இடையே தொலைபேசி அழைப்பை 2022 மார்ச் 21 ஆம் திகதியன்று ஏற்படுத்திக்கொடுத்ததுடன், ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக வெளிநாடுகளில் உள்ள அந்தந்த இலங்கை தூதரகங்கள்/பதவிகளின் உதவியுடன் பின்வருவன உட்பட உயர்மட்ட விஜயங்களுக்கு இந்தப் பிரிவு வசதியளித்தது:

i. சவூதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர், உயரிய இளவரசர் பைசல் பின் /பர்ஹான் அல் சௌத் அவர்களின் 2022 மார்ச் 14 ஆம் திகதி இலங்கைக்கான விஜயம்.

ii. 2022 மார்ச் 19 - 21 திகதிகளில் பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அவர்களின் சவூதி அரேபிய இராச்சிய விஜயம்.

iii. 2022 ஜனவரி 3 ஆம் திகதி நடைபெற்ற EXPO-Sri Lanka தேசிய தினத்தில் பங்கேற்பதற்காக முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல் பீரிஸின் ருயுநு விஜயம். சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கை மற்றும் பஹரென் இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளுக்கான விசா தேவைகளில் இருந்து 2022 யூலை 26ஆம் திகதி முதல் விலக்கு அளிப்பதற்கான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்து வதற்கான சட்ட நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டன. கடல்சார் அனர்த்தங்களைச் சமாளிப்பதற்காக ஆயுசீழுடு சமவாயத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியை வழங்க இஸ்ரேல் அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

பஹரெனில் உள்ள இலங்கைத் தூதுவர் 2022 டிசம்பர் 24 அன்று பஹரெனின் உயர்கல்வி பேரவையின் (HEC) பொதுச் செயலாளரும், அதன் நம்பிக்கைபொறுப்பாளர் சபையின் உப தலைவருமான டாக்டர் ஷைகா ரானா பின்ட் இசா பின் டாய்ஜ் அல் கலீ/பாவைச் சந்தித்து இரண்டு நாடுகளுக்கும் இடையே உயர்கல்வி தொடர்பான ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடியிருந்தார்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதுவர், குவைத் சுகாதார அமைச்சின் உதவி துணைச் செயலாளரை சந்தித்து, குவைத்தின் அரசு சுகாதாரநலன் துறையில் இலங்கை சுகாதார தொழில்சார் நிபுணர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக இரு அரசாங்கங்களுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கினார்.

பொருளாதார இராஜதந்திரம்: இந்த பிரிவு அறிக்கையிடல் காலத்தின்போது பின்வரும் செயற்பாடுகளுக்கு வசதியளித்தது:

i. 2022 பெப்ரவரியில் முகுயுநுனு குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தபோது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிர்மாணிப்பதற்கும் உபகரணங்களை வழங்குவதற்கும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியமும் (KFAED) இலங்கை அரசாங்கமும் கடன் உடன்படிக்கையொன்றை செய்துகொண்டன.

ii. டோஹாவில் உள்ள இலங்கை தூதரகம், ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து, டோஹா கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் (DECC). 2022 மார்ச் 10 முதல் 14 வரை நடைபெற்ற கட்டார் 9 ஆவது சர்வதேச விவசாய கண்காட்சியில், AgriteQ 2022 இல் இலங்கை விவசாய பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

iii. டெல் அவிவில் உள்ள இலங்கைத் தூதரகம் விவசாயத் துறையில் (விதை உருளைக்கிழங்கு வளர்ப்பு), பால் பண்ணை மற்றும் மீளபுதுப்பிக்கத்தக்க சக்திவலு துறைகளில் முதலீட்டு முன்மொழிவுகளைப் பெற்றிருந்ததுடன் இப்பிரிவானது, இந்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதை விரைவுபடுத்துவதற்காக அந்தந்த சம்பந்தப்பட்ட முகவராண்மைகளுடன் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தேயிலையை இறக்குமதி செய்வதற்காக இஸ்ரேலிய வர்த்தக சம்மேளனத்தின் (FICC) ஊடாக முன்னணி இஸ்ரேலிய சுப்பர்மாகட் சங்கிலியான "Shufersal" இலிருந்து தூதரகம்

வர்த்தக / வணிக வாய்ப்பையும் பெற்றுக்கொண்டது. டெல் அவிவில் உள்ள இலங்கைத் தூதரகம், இஸ்ரேலிய வர்த்தக சம்மேளனம் (FICC) ஊடாக சேதன உணவுகளை இறக்குமதி செய்வதற்காக (300 மி.லீ., 500 மி.லீ. மற்றும் 1 லீட்டர டெட்ரா பெகற்றில் 20-22% கொழுப்பு உள்ள சேதன தேங்காய் கிரீம்) ஒரு முன்னணி இஸ்ரேலிய நிறுவனமான " ஓல் கிறீன் பீல்ட் புட்ஸ் லிமிடெட்" இலிருந்து வர்த்தக/வணிக வாய்ப்பைப் பெற்றுள்ளது.

iv. FITS ஏவியேஷின் (பிறைவட்) லிமிடெட்டை ஒரு திட்டமிடப்பட்ட சர்வதேச பயணியர் மற்றும் பண்ட வானூர்தியாக நியமிப்பதற்கான இலங்கையின் கோரிக்கைக்கு பஹ்ரைன் அதிகாரிகளிடமிருந்து கொள்கை அடிப்படையில் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டது.

v. அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் டுபாயில் உள்ள துணைத் தூதரகம் என்பன இலங்கையின் தேசிய வர்த்தக கழகத்துடன் இணைந்து 2022 பிப்ரவரி 17 முதல் 20 வரை டுபாய் கண்காட்சி நிலையத்தில் வியாபார அரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

vi. டுபாயில் உள்ள துணைத் தூதரகம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இல் வியாபார பங்காளர்களாக விரும்புகின்ற இலங்கை வியாபாரிகள் / முயற்சியாளர்களுக்கு உதவும் நோக்கில் டுபாய் மையமாகக் கொண்ட இலங்கை வர்த்தக அலுவலகம் டுபாய் எல்எல்சீ உருவாக்குவதற்கு வசதியளித்திருந்தது.

vii. றியாத் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜெட்டா உள்ள துணைத் தூதரகம் என்பன இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து குழழனநஒ 2022 - ஜெட்டா கண்காட்சியில் பங்குபற்றியதுடன் சவுதிஅரேபிய இராச்சியத்திற்கு உணவு பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பல்வேறு கம்பனிகளுடன் தொடர்பினை உருவாக்கியிருந்தன.

viii. இலங்கை கோப்பியை ஜோர்தானுக்கு அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை அராபி கோப்பி மேம்பாடு 2022 மார்ச் 23 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

ix. ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகம் 2022 ஆம் ஆண்டு மார்ச் 5-9 ஆம் தேதி வரை ஓமான் வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் (OCCI) தலைவர் தலைமையிலான 17 பேர் கொண்ட உயர்மட்ட ஓமான் வணிக உறுப்பினர் முதல் விஜயத்தை இலங்கைக்கு ஏற்பாடு செய்தது. இக்குழு இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்ந்தது.

x. 2022 மார்ச் 02 ஆம் திகதியில் ஈரானில் சிலோன் தேயிலை சந்தை பற்றிய கலந்துரையாடலையும், 2022 யூன் 27 இல் தெஹ்ரானில் "கோல்டன் பாரடைஸ் விசா திட்டம்" பற்றிய மேம்பாட்டு நிகழ்வையும் ஏற்பாடு செய்தது.

புலம்பெயர்ந்த தொழில் நலனோம்பல், வெளிநாட்டு இலங்கையர்கள்: இந்தப் பிரிவு மற்றும் அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம் என்பன, மனிதவளத் துறையில் இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் முதலாவது கூட்டுக் குழுக் கூட்டத்துக்கு வசதியளித்தன. இந்த சந்திப்பு மெய்நிகராக 2022 ஏப்ரல் 6 ஆம் திகதியில் நடைபெற்றது. குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து மீளாய்வு காலத்தின்போது 48,883 புலம்பெயர்ந்த தொழிலாளர் ஒப்பந்தங்களை செயல்படுத்தின என்பதுடன் இவெவேப (SLBFE) பதிவுகளின்படி 59,690 இலங்கையர்கள் குவைட்டில் வேலைக்காக இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர். குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம், குவைத் செம்பிறைச் சங்கம், குவைத் உதவி வலையமைப்பு, நோயாளிகள் உதவி நிதியம், குவைத்தின் இரட்சணிய சேனை, குவைத் மனிதாபிமான மற்றும் நட்பு சங்கம், சமூக பணியாளர்கள் சங்கம் மற்றும் சண்டிகன் குவைத் ஆகியவற்றின் ஆதரவுடன் மருத்துவமனைகளில் இருந்தவர்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு வசதி செய்தது. பஹ்ரெனில் உள்ள இலங்கைத் தூதுவர் 2022 டிசெம்பர் 27 ஆம் திகதி தொழில் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் மற்றும் பஹ்ரெனின் தொழில் சந்தை ஒழுங்குபடுத்தற் அதிகாரசபை (LMRA) பணிப்பாளர் சபையின் தலைவருடன் நடைபெற்ற சந்திப்பில் தொழில் உறவுகள் குறித்து கலந்துரையாடினார். ரியாத்தில் உள்ள இலங்கை தூதரகம் (LMRA) இல் பல்வேறு வேலை வகைகளில் 96,188 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கையிடல் காலத்தில் இலங்கையர்களுக்கு 10,188 வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளது. பஹ்ரெனில் உள்ள இலங்கைத் தூ தரகம், இலங்கை பொறியியல் சங்கம் மற்றும் பஹ்ரெனில் உள்ள அமெரிக்க மிஷன் மருத்துவமனையுடன் இணைந்து இலவச மருத்துவ முகாம் மற்றும் கிளினிக்கை 2022 யூன் 17 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது.

கோவிட் 19 தொடர்பான செயற்பாடுகள்: இலங்கையின் சுகாதாரத் துறையின் இயலளவினை பலப்படுத்துவதற்கும், மருத்துகள் மற்றும் அவசரமாக தேவைப்படும் மருத்துவ வழங்கல்களை வழங்குவதற்கும் கட்டார் செஞ்பிறைச்

சங்கம் 100,000 அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. மீளாய்வு காலத்தின்போது, குவைத்தில் உள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவனமும் இரண்டு தனியார் துறை நிறுவனங்களும் அமெரிக்க டொலர் 35,000மதிப்புள்ள மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கு பங்களித்தன. ஓமான் அரசாங்கம் 2022.09.16 ஆம் திகதி 1,000,000 அமெரிக்க டொலர் மதிப்பிலான மருத்துவ உதவியை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டதுடன் மற்றும் பிரிவு தொடர்புடைய அதிகாரிகளுடன் பின் ஆய்வு செய்கின்றது.

2.5.6 தெற்காசியா பிரிவு

இருதரப்பு உறவுகள்: இலங்கை உயர் ஸ்தானிகர் (இ.உ.ஸ்)/ புதுதில்லியுடன் இணைந்து தெற்காசியப் பிரிவு, 2022 டிசம்பர் 20 ஆம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் (இந்திய சமுத்திர பிராந்தியம்) புனீத் அகர்வால் விஜயத்துக்கு வசதியளித்தது. போக்குவரத்து மற்றும் தொடர்பு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களின் இந்திய விஜயத்துக்கு வசதியளித்தது. புது தில்லியில் நடைபெற்ற 3 ஆவது பயங்கரவாதத்திற்கு பணமில்லை (NMFT) அமைச்சு மாநாட்டில் இ.உ.ஸ்/ புதுதில்லி பங்கேற்றது. இ.உ.ஸ் /காத்மண்டு இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 65 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக "நேபாளம்-இலங்கை நட்பு: பழங்காலத் தொடர்புகளிலிருந்து தற்போது வரை" என்ற தலைப்பில் ஒரு உரையாடலை 2022 டிசம்பர் 19 ஆம் திகதி ஏற்பாடு செய்தது. இ.உ.ஸ்/டாக்கா, 2022 நவம்பர் 24-26 வரை IORA இன் துணைத் தலைவர் 22 ஆவது அமைச்சர்கள் குழு கூட்டத்திற்கு டாக்காவிற்கு விஜயம் செய்த போது, பங்காளதேஸ் பிரதமர், வெளியுறவு அமைச்சர் மற்றும் பங்காளதேஸ் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஆகியோருடன் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரிக்கு இடையேயான சந்திப்புகளுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. 2022 நவம்பரில் எகிப்தில் நடைபெற்ற உலகத் தலைவர்கள் உச்சிமாநாட்டின் ஓரங்கட்டுதல் தொடர்பாக மாலைதீவின் சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சருடன் சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமதுவின் சந்திப்பை இ.உ.ஸ்/மாலே ஒருங்கிணைத்தது. இ.உ.ஸ்/இஸ்லாமாபாத் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான தூதுக்குழு 2022 டிசம்பரில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தபோது பாகிஸ்தானின் நிதியமைச்சர் மற்றும் திட்டமிடல் அமைச்சருடனான சந்திப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் வசதிகளை செய்துகொடுத்தது. இ.உ.ஸ்/இஸ்லாமாபாத் ஐதராபாத்திற்கான இலங்கை கௌரவ தூதரக நியமனத்தை முறைமைப்படுத்தியது.

பலதரப்பு உறவுகள்: இ.உ.ஸ்/மாலே இலங்கை மக்கள் மற்றும் கலாசாரத்தின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் விற்பனைக்கூடத்துடன், 2022 நவம்பர் 4 அன்று நடைபெற்ற உலக ஐ.நா தின கொண்டாட்டத்தை குறிக்கும் வகையில் ஐ.நா மாலைதீவுகள் ஏற்பாடு செய்த நிகழ்வில் பங்கேற்றது. இ.உ.ஸ்/புதுதில்லியானது, புது தில்லியில் உள்ள பலதரப்பு நிறுவனங்களின் கூட்டங்களில் (AALCO, AARDO, ISA, CDRI,NAM S&T நிலையம் உட்பட) இலங்கையை ஒருங்கிணைத்து பிரதிநிதித்துவப்படுத்தியது.

பொருளாதார இராஜதந்திரம்: இ.உ.ஸ்/இஸ்லாமாபாத் மற்றும் இ.உ.ஸ்/கராச்சி என்பன 2022 டிசம்பர் 15 ஆம் திகதி மெய்நிகராக நடைபெற்ற பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான "வர்த்தகம், முதலீடு மற்றும் வாகனத் துறை" தொடர்பான கூட்டுப் பணிக்குழுவின் 3 ஆவது கூட்டத்திற்கு வசதியளித்தன. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உடனான ஒத்துழைப்புடன் இ.உ.ஸ்/டாக்கா, 2022 செப்ரெம்பர் 29-30 மற்றும் ஒக்டோபர் 1 வரை பங்களாதேஷில் நடைபெற்ற 9 ஆவது ஆசிய சுற்றுலா கண்காட்சியில் (ATF) பங்கேற்றிருந்தது. இலங்கை மாநாட்டு பணியகத்தின் ஆதரவுடன் இ.உ.ஸ்/டாக்கா, 5 பங்களாதேஷ் பயண முகவர்கள் மற்றும் 2 ஊடகப் பணியாளர்கள் பொருட்டு 2022 நவம்பர் 19 முதல் 25 வரை ஆஜஊநு குயுஆ சுற்றலாவை ஒழுங்குசெய்திருந்தது. 2022 நவம்பர் 24 அன்று உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பங்களாதேஷில் உள்ள இலங்கை வர்த்தக சமூகம் மற்றும் பங்களாதேஷ் வர்த்தக நிபுணர்களை சந்தித்தார். இ.உ.ஸ்/மாலே 2022 டிசம்பர் 15 அன்று மாலைதீவின் அரச வர்த்தக அமைப்பின் முகாமைப் பணிப்பாளரைச் சந்தித்து இலங்கை நிறுவனங்களுக்கான வணிக வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினார். மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மற்றும் சீ நோர் கூட்டுத்தானத்தின் தலைவர் ஆகியோர் மாலைதீவு மீன்பிடி, கடல் வளங்கள் மற்றும் விவசாய அமைச்சரை டிசெம்பர் 29 அன்று சந்தித்து பரஸ்பர நன்மை பயக்கும் உறவைக் கட்டியெழுப்புவதற்கு பல ஒத்துழைப்பு துறைகள் பற்றி கலந்துரை யாடினார்கள். பாகிஸ்தான் இறக்குமதியாளர்களுக்கு தேங்காய் நார் பொருட்கள், தேங்காய் சிரட்டைக் கரி / செயற்படுத்தப்பட்ட கார்பன் தயாரிப்புகளை இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு 2022 ஒக்டோபர 12 அன்று, Meh/கராச்சி ஒரு வெபினாரை ஏற்பாடு செய்தது. இலங்கை கொன்சுலேற் அலுவலகம் /கராச்சி 19 அக்டோபர் 2022 ஒக்டோபர 19 அன்று காய்ந்த தேங்காய், கொழுப்பு நீக்கப்பட்ட தேங்காய், தேங்காய் எண்ணெய், கன்னித் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் இலங்கை ஏற்றுமதியாளர்களை பாகிஸ்தான் இறக்குமதியாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக ஒரு வெபினாரை ஏற்பாடு செய்தது. பாகிஸ்தான் இறக்குமதியாளர்களுக்கு பீங்கான் மற்றும் பீங்கான் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த இஆ.நா /கராச்சி 2 நவம்பர் 2022 அன்று வெபினாரை ஏற்பாடு செய்தது. இஆநா/கராச்சி 2022 நவம்பர் 16 அன்று இலங்கையின் கூரை ஓடுகள் / மட்பாண்ட தரை ரூ சுவர் ஓடுகள் / மர தரை ஏற்றுமதியாளர்களை பாகிஸ்தான் இறக்குமதியாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக ஒரு வெபினாரை ஏற்பாடு செய்தது.

பொது இராஜதந்திரம்: இ.உ.ஸ்/டாக்கா, பங்காளதேசத்தின் சார்க் பெண்கள் சங்கம் 2022 நவம்பர் 25 ஆம் திகதி ஹோட்டல் வெஸ்டின் டாக்காவில் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு விழாவையொட்டி ஏற்பாடு செய்த கண்காட்சியில் பங்கேற்றது. 2022 நவம்பர் 23 ஆம் திகதி பங்களாதேஷின் டெய்லி ஸ்டார் செய்தித்தாளின் இராஜதந்திர நிருபர் பொரிமோல் பால்மாவுடன் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரிக்கு இ.உ.ஸ்/டாக்கா, ஒரு பத்திரிகை நேர்காணலையும், 2022 நவம்பர் 25 ஆம் திகதி பங்களாதேஷின் DBC அலைவரிசையுடன் தொலைக்காட்சி நேர்காணலையும் ஏற்பாடு செய்திருந்தது. இ.உ.ஸ்/புதுதில்லி உயர்ஸ்தானிகராலயத்தில் இந்தியாவிற்கான இலங்கையின் முதல் பிரதிநிதியான சர் டி.பி.ஜயதிலகவின் மார்பளவு சிலையை 2022 நவம்பர் 7 ஆம் திகதி திறந்து வைத்திருந்தார்.

பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு: இ.உ.ஸ்/புதுதில்லியுடன் ஒருங்கிணைப்புடன் தெற்காசியப் பிரிவு, இந்தியாவின் கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர்.ஹரி குமாரின் 2022 டிசம்பர் 13-15 வரை இலங்கைக்கான விஜயத்திற்கு ஏற்பாடு செய்தது. பாகிஸ்தான்-இலங்கை ஆயுதப்படை பாதுகாப்பு உரையாடலின் (AFDD) மூன்றாவது சுற்று கராச்சியில் உள்ள எக்ஸ்போ நிலையத்தில் 2022 நவம்பர் 16 முதல் 17 வரை நடைபெற்றது.

ஏனையவை: லும்பினியில் உள்ள சர்வதேச பௌத்த சங்கத்தால் கையளித்த 25000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள 10 தொன் சாதாரண சேலைன் மற்றும் ஏனைய அத்தியாவசிய மருந்துகளை 2022 ஒக்டோபர் 12 அன்று SLEMB / காத்மாண்டு அனுப்பியது. இ.உ.ஸ் /காத்மாண்டு மேடை நாடகம் குழுவின் வருகையை எளிதாக்கியது. 2022 நேபாள சர்வதேச நாடக விழாவில் (NITFest) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக "ரஜ மன் வஹல" மேடை நாடகம் குழுவின் விஜயத்துக்கு வசதியளித்தது. இக்குழுவானது 2022 நவம்பர் 26 முதல் டிசம்பர் 4 வரை நேபாளத்தில் தங்கியிருந்தது. இ.உ.ஸ./இஸ்லாமாபாத் மற்றும் இ.ஆ.நா./கராச்சி என்பன இலங்கையின் சிலோன் தேயிலை ஒப்படையை நன்கொடையாக வழங்க உதவியது. பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2022 செப்ரெம்பர் 21 அன்று நன்கொடையாக வழங்குவதற்கு உதவியது.

2.5.7 தென் கிழக்காசியா பிரிவு

இருதரப்பு உறவுகள்: அங்கீகாரம் பெற்ற முடிவிடங்களுடன் மேம்பட்ட அரசியல் ஆலோசனைகள் ஊடாக இருதரப்பு ஒத்துழைப்பு புத்துயிர் பெறுதல்: இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் மலேசியாவுடன் 1 ஆவது சுற்று இருதரப்பு அரசியல் ஆலோசனைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள், வியட்நாம் உடனான பொருளாதார, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் 4 ஆவது சுற்று, தாய்லாந்துடன் அரசியல் ஆலோசனைகளின் 5 ஆவது சுற்று மற்றும் சிங்கப்பூருடன் வெளியுறவு அலுவலக ஆலோசனையின் 1 ஆவது சுற்று, 2022 சனவரி 24 அன்று இலங்கை மற்றும் வியட்நாம் இடையேயான இருதரப்பு அரசியல் ஆலோசனைகளின் 4 ஆவது சுற்று நிகழ்நிலை வடிவில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. விவசாயம், பாதுகாப்பு, சுற்றுலா, விமான சேவைகள், சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிராக போராடுதல் இருதரப்பு கருவிகளைத் தொடங்குவதற்கும், இறுதி செய்வதற்கும் மற்றும் புதுப்பிப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். பிலிப்பைன்/தேர்தல் ஒத்துழைப்புடன் போதை மருந்துகள், இந்தோனேசியாவுடன் ஆக்கபூர்வமான பொருளாதாரம் மற்றும் விளையாட்டு/கல்வி, விருப்ப விடயங்களில் பரஸ்பர உதவி, விவசாய ஒத்துழைப்பு, பரஸ்பர பாதுகாப்பு மற்றும் வியட்நாம் உடன் வகைப்படுத்தப்பட்ட தகவல் பரிமாற்றம் மற்றும் தாய்லாந்து/கலாசார ஒத்துழைப்பு, கலாசாரம், கல்வி, சுற்றுலா கம்போடியா மற்றும் லாவோ PDR உடன் வர்த்தகம், விளையாட்டு மற்றும் வர்த்தகம். லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் கலப்பு வெபினாருக்கு வசதியளிக்கப்பட்டது.

உயர்மட்ட தொடர்புகள் ஊடாக இருதரப்பு உறவுகளை பலப்படுத்துதல்: 2022 செப்டெம்பர் மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்கள் சபையின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்வற்காக சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிலிப்பைன்ஸுக்கு பணி விஜயம் (சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பிலிப்பைன்ஸ் சனாதிபதி பெர்டினன் ஆர். மாகோஸ் யூனியருக்கும் இடையிலான இருதரப்பு சந்திப்பு 2022 செப்டம்பர் 29 ஆம் திகதி நடைபெற்றது. சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூருக்கான இடைமாற்று விஜயம் ஒருங்கிணைக்கப்பட்டது. சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் அவர்களின் அழைப்பின் பேரில் வெளிநாட்டு அமைச்சர் (பேராசிரியர்) ஜி.எல். பீரிஸின் சிங்கப்பூர் விஜயம் 2022 யூன் மாதத்தில் ஒருங்கிணைக்கப் பட்டது. இந்தோனேசியாவின் பாலி நகரில் 2022 மார்ச் 20-24 வரை நடைபெற்ற 144 ஆவது பாராளுமன்றங் களுக்கிடையான ஒன்றிய சட்ட பேரவையில் பாராளுமன்ற சபாநாயகர் தலைமையிலான குழு கலந்து கொண்டது. மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், உயர்மட்டக் குழுவுடன் 2022 ஒக்டோபர் 25-29 வரை சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். 2022 ஆம் ஆண்டுக்கான அரசியல் மட்டத்தில் உயர்மட்ட ஈடுபாடுகள் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அவர்களின் சிங்கப்பூருக்கான இடைமாற்று விஜயத்துடன் முடிவுற்றது.

பலதரப்பு உறவுகள்: ஐ.நா. முகவர் நிறுவனங்கள், ASEAN, ARF, CPSC, UNESCAP மற்றும் ReCCAP ஆகியவற்றுடன் அடிக்கடி ஈடுபடுதல் மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலை நிறைவு செய்வதற்கு கூட்டாண்மைகளை கட்டியெழுப்புதல். 2022 ஆகஸ்ட்டில் கம்போடியாவில் நடைபெற்ற 29 ஆவது ஆசியான் பிராந்திய அரங்கில் (வெளிநாட்டு அமைச்சர் மட்டம்) வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி பங்கேற்றார். பணிப்பாளர் நாயகம்/தென்கிழக்கு ஆசியா. 2022 ஏப்பிரல் மாதத்தில். தாய்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் மெய்நிகர் வடிவத்தில் இணைத் தலைவராக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, யுசுகு 13 ஆவது ISM இல் பரவல் தடை மற்றும் ஆயுதக் குறைப்பு (NPD) இல் பங்கேற்றார். அமைதியான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவது தொடர்பான அமர்வுக்கு இலங்கை தலைமை தாங்கியது. 2022 மார்ச் 30 ஆம் திகதி 5 ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டை இலங்கை ஒழுங்குசெய்திருந்ததுடன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வுன்னா மவுங் ல்வின் மியான்மரை பிரதிநிதித்துவப்படுத்தினார். 2022 மார்ச் 30 ஆம் திகதிஇலங்கை நடத்திய 5 ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் தாய்லாந்து இராச்சியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான டொன் பிரமுத்வினாய் இலங்கைக்கு விஜயம் செய்தார். உலக கடல் தாவரத் தினத்தன்று இலங்கை சமர்ப்பித்த வரைவுத் தீர்மானத்திற்கு இந்தோனேஷியா இணை அனுசரணை வழங்கியிருந்ததுடன், அத்தீர்மானம் 2022 மே 23 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

பொருளாதார இராஜதந்திரம்: அங்கீகாரம் பெற்ற நாடுகளில் எதிர்கால கொள்வனவாளர்கள்/முதலீட்டாளர்கள் மற்றும் இலங்கையில் உள்ள வணிகக் கட்சிகளுக்கு இடையே அந்தந்த இலங்கை தூதரகங்கள்/வெளிநாட்டில் உள்ள தூதரகங்கள் மூலம் வணிகத்தில் இருந்து வணிகத்திற்கான தொடர்புகளை எளிதாக்குதல்:

i. இ.உ.ஸ்/ இந்தோனேஷியா: இந்தோனேசிய வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் கூட்டங்களை நடத்தியது, சஞ்சீவ ஆயுர்வேத தயாரிப்புகள், தங்கொடுவ போர்சிலின் மற்றும் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் போன்ற இலங்கை தயாரிப்புகளை மேம்படுத்துவதற்கு B2B கூட்டங்களை ஏற்பாடு செய்து, 2022 யூலை மாதத்தில் ஜகார்த்தா எக்ஸ்போவில் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது.

ii. இ.உ.ஸ்/மலேசியா: இலங்கை தேயிலை சபை, வர்த்தக கழகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து மலேசிய சர்வதேச உணவு மற்றும் பானங்கள் கலப்பு வர்த்தக கண்காட்சி (MIFB), விவசாய பொருட்கள் கண்காட்சி மற்றும் சிலாங்கூர் சர்வதேச எக்ஸ்போ (MIFB), ஆகிய மூன்று வர்த்தக கண்காட்சிகளில் இலங்கை பங்கேற்பதற்கு ஏற்பாடு செய்து வசதியளித்தது.

iii. இ.உ.ஸ்/ பிலிப்பைன்ஸ்: புகழ்பெற்ற பிலிப்பைன்ஸ் குழுமத்திற்கு ((Aboitiz Group, Magsaysay Group and Frabelle Grouபி), முதலீட்டு வாய்ப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, தூதரகமானது இலங்கை த.தொ.தொ. நிறுவனங்களுக்கு (ICT Companies) உதவிகளை வழங்கியுள்ளதுடன், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் முன்னணி பிலிப்பைன்ஸ் சில்லறை விற்பனைச் சங்கிலிகளுக்கு (SnR, Robinsons போன்றவை) ஊக்குவித்துமுள்ளது.

iv. இ.உ.ஸ்/சிங்கப்பூர்: சிங்கப்பூரில் உள்ள ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இரத்தின வியாபாரிகள் சங்கம் என்பவற்றுடன் இணைந்து மெய்நிகர் வாங்குநர்-விற்பனையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்ததுடன், இலங்கையில் வர்த்தக வாய்ப்புகளை ஒன்றில் மெய்நிகராக அல்லது பௌதிகரீதியாக மேம்படுத்துவதில், இலங்கை மற்றும் சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு இடையே 100 இற்கும் மேற்பட்ட டீ2டீ சந்திப்புகளை ஒழுங்குசெய்து 2022 முதல் அரையாண்டில் (FDI) சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளது.

v. இ.உ.ஸ்/வியட்நாம்: டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி, மலிபன் பிஸ்கட் உற்பத்தி நிறுவனம் போன்ற இலங்கையின் முன்னணி நிறுவனங்களுக்கும் வியட்நாம் நிறுவனங்களுக்கு இடையேயான B2B சந்திப்புகளுக்கு வசதியளிக்கப்பட்டது. வியட்நாமிய பயண முகவர்களுக்கான இலங்கைக்கான முதல் FAM சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்தது, FAM சுற்றலாபயண பங்கேற்பாளர்களுக்கும் 12 வியட்நாமிய ஊடகங்களுக்கும் இடையே ஊடக தொடர்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை 2022 மார்ச் மாதத்தில் ஏற்பாடு செய்தது.

vi. இ.உ.ஸ்/மியான்மார்: இலங்கைக்கும் மியான்மாருக்கும் இடையே நேரடி விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகள் மற்றும் ஏனைய அக்கறைதார்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. கொழும்பு - யாங்கூன் - போத்கயா அல்லது கொழும்பு - யாங்கூன் - காத்மாண்டு ஆகியவற்றுக்கு இடையேயான சர்க்யூட் (Circuit) இணைப்பில் குறிப்பிடத்தக்க மத சுற்றுலாத் தலங்களை இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2022, 2023 காலப்பகுதியில் இலங்கைக்கு 50,000 மெற்றிக்

தொன் மியன்மார் பச்சரிசி அரிசி (parabolic) மற்றும் 100,000 மெற்றிக் தொன் மியன்மார் வெள்ளை அரிசியை வழங்குவதற்காக இரு நாடுகளுக்கிடையில் 2022 சனவரி மாதத்தில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

vii. கொழும்பு துறைமுக நகர திட்டம் மற்றும் நாட்டில் அடையாளம் காணப்பட்ட பிற இடங்களுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அங்கீகாரம் பெற்ற நாடுகளில் உள்ள பொது மற்றும் தனியார் துறைகளுடன் தொடர் கலந்துரையாடல்களை நடத்தியது.

கண்காட்சிகள் / மெய்நிகர் மாநாடுகள் மற்றும் ஏனைய மேடைகள் ஊடாக இலங்கை உற்பத்திகள் / சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல்: இந்தோனேசியா - ஜகார்த்தாவில் உள்ள புந்தரன் HI MRT நிலையத்தில் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மியன்மார் , மியாமர் அரசாங்கம், இலங்கை முதலீட்டாளர்கள் மற்றும் தேயிலை மற்றும் தேங்காய் உற்பத்தித் துறைகளில் நிபுணர்களை மியான்மரில் முதலீடு செய்வதற்கு உத்தியோகபூர்வமாகவும் வெளிப்படையாகவும் அழைப்பு விடுத்துள்ளது. மலேசியா - ஒரு மலேசிய முதலீட்டாளரின் தாய்க் கப்பலில் முதலீட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டது மற்றும் முதலீட்டுச் சபையின் கீழ் முதலீட்டின் சாத்தியக்கூறுகளை ஆராய மு.ச. (BoI) அதிகாரிகளுடன் ஒரு மெய்நிகர் சந்திப்பை ஏற்பாடு செய்தது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து மலேசிய பயணிகளிடையே இலங்கை சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக WorldTEX சுற்றுலா 2022 கலப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு பங்குபற்றப்பட்டது. சிங்கப்பூர் , சர்வதேச தேயிலை மற்றும் கோபி ஆசியா, ஸ்பெசலற்றி மற்றும் பைன் புட் ஆசியா, சிங்கப்பூர் சர்வதேச நகை கண்காட்சி, உணவு மற்றும் ஹோட்டல் ஆசியா, நகைகள் மற்றும் ஜெம் வேர்ல்ட், ILTM ஆசிய பசிபிக் ஆகிய ஆறு சிங்கப்பூர் வர்த்தக மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் இலங்கை நிறுவனங்களின் பங்கேற்பை ஒருங்கிணைத்தது. வியட்நாம் - 2022 மார்ச் மாதத்தில் ஹா நொய்யில் நடைபெற்ற வியட்நாம் எக்ஸ்போவில் பங்கேற்றது. பிலிப்பைன்ஸ் - பிலிப்பைன்ஸில் இலங்கைக்குச் சொந்தமான பால் தேநீர் உரிமையாளரான ஐலேண்ட் B கம்பனியை மேம்படுத்துவதற்கு செயலாற்றியிருந்தது

